விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 16 சனிக்கிழமை (01.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 225




# ஐ.தே.கவினர் மீது துப்பாக்கிச் சூடு

## இருவர் பலி : 13 பேர் காயம்



(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக நேற்றையதினம் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டிருந்தவர்கள் மீது வாகனத்தில் வந்த ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதில் பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)













நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகரசபையின் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக கடந்த 7ஆம் மாதம் 31 ஆம் திகதி மூன்று பிரிவுகளாக யாழ்ப்பாண மாநகர பொது நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட சிறுகதை பல்தேர்வு வினாவிடைப் போட்டி முடிவுகளை வெளியிட் டுள்ளன. இதன்படி,

பு.லக்சனா–யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மேற்பிரிவு– நிலை 1, சீ.விதுசா–யா/மட்டுவில்.சந்திர.மௌலீச.வித்தியாலயம், மேற்பிரிவு– நிலை 2, அ.அபிநந்தன்–யா/யாழ். இந்துக் கல்லூரி, மேற்பிரிவு– நிலை 3, கி.ஆருரன்–யா/யாழ்.இந்துக் கல்லூரி, மத்தியபிரிவு– நிலை 1, பா.அனஸ்ரிகா – யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம், மத்திய பிரிவு– நிலை 3, சு.திவானன்–யா/யாழ்.இந்துக் கல்லூரி, கீழ்ப்பிரிவு– நிலை 1, ஞா.பதுசா – யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை, கீழ்ப்பிரிவு– நிலை 2, க.நிலக்சன்–யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், கீழ்ப்பிரிவு– நிலை 3 ஆகியோரது பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன். (செ)


## சின்னமடு ஆலய உற்சவம்

சரவணை சின்னமடு செபமாலை அன்னையின் திருவிழா 27-07-2015 ஆரம்பமாகி 05-08-2015 உடன் நிறைவடைகின்றது.04-08-2015 திருவிழாவின் முதல் நாளும் மறுநாள் திருவிழாவும் இடம் பெறுவதால் ஆலய வளவினுள் ஐஸ்கிறீம், இனிப்புப் பண்டங்கள், கச்சான் கடைகள், உணவுக்கடைகள் மற்றும் இதர பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு 02-08-2015 நாளை முதற் கடைகளைப் பெறுபவர்களுக்கு சின்னமடு ஆலய முன்றலில் காலை 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும் என்பதை வியாபாரிகளுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். கடைகளைப் போட விரும்பும் வியாபாரிகள் 02-08-2015 நாளை ஆலயப் பரிபாலகரை காலை 10.00 மணிக்குச் சந்தித்து உங்கள் இடங்களை நேர காலத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(1275)

தொடர்புகளுக்கு 077-9779446

இப்படிக்கு
பரிபாலகர்
அருட்பணி ஞா.பீற்றர்


## பொதுக்கூட்டம்

யாழ்.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இப்பொதுக் கூட்டத்துக்கு பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் படி பாடசாலை சமூகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5-29)


**உழவு இயந்திர கலப்பை தேவை**

உழவு இயந்திர இங்கிலன்ட் கலப்பை,இங்கிலன்ட் டிஸ் என்பன தேவை.

விற்பனைக்குள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் (க)

தொலைபேசி இல. - 0776341216

**6 மாதங்களில் வெளிநாட்டு விசா & தொழில் ஏற்பாட்டுடன்**

SIKARAM
Get Set for Career & Take off Your Dreams

Business & Hotel Management

புதிய பிரிவு ஆரம்பம் - செவ்வாய், வியாழன் 10.00 am
Call:077 36 16 796

Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11


## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**முருகேசு சிவஞானம்**
(இ.போ.ச காப்பாளர்)

தோற்றம் 1951-01-29 — மறைவு 2015-07-03

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02-08-2015) ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 6.00 மணியளவில் வெள்ளிருவை ஞான வைரவ ஆலய முன்றலில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மு.ப. 11.30 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும், கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது தொலைபேசி மூலமும், நேரில் வந்தும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கட்டுக்கொம்பரை,
அல்வாய் - கிழக்கு
அல்வாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.


**நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...**

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**

**மீனவ தொழிலாளர்களுக்கு வளமான ஓர் எதிர்காலத்தை உருவாக்குவேன்**

யாழ் மாவட்டத்தில் மீன்பிடி துறையில் முதலீடு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதுடன் மானிய அடிப்படையில் உதவிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வேன்.
இடம்பெயர்ந்த மீனவத் தொழிலாளிகளுக்கு மீன்பிடி துறைமுக அபிவிருத்தி செய்வதுடன் மீன்பிடித் தொழில் திட்டமிடல் நிலையங்களை நிறுவுவதுடன் புனர்நிர்மாணம் செய்வேன்.
இதன் மூலம் மீன்பிடிச்சமூகத்தின் பொருளதார நிலையை உயர்த்துவேன்



வெற்றிலைச் சின்னத்திற்கும்
இலக்கம் 1 இற்கும் வாக்களியுங்கள்



**அங்கஜன் இராமநாதன்**
MBA (International) B.Eng (Hons)
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email.Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# ஐ.நா அறிக்கைக்கு பின்

# உள்ளக பொறிமுறை முன்னெடுப்பு

## பிரதமர் ரணில் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை பேரவையின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் குறுகிய காலத்தில் உள்ளகப் பொறிமுறை குறித்த சிபார்சுகளை முன்னெடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழில் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....



## தேர்தல் சுவரொட்டி 4 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையத்தில் தேர்தல் சுவரொட்டிகளுடன் 4 பேர் சாவகச்சேரிப் பொலிஸாரினால் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சி வேட்பாளர் ஒருவரது தேர்தல் சுவரொட்டிகளை பொது மக்களிடம் விநியோகம் செய்து கொண்டிருக்கும் போது

23ஆம் பக்கம் பார்க்க....

## த.தே.ம.முன்னணியின் பிரசார கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு வல்வெட்டித்துறை கடற்கரையிலுள்ள ரேவடி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தேர்தல் முறைப்பாடுகள் முதலிடத்தில் கொழும்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தொடர்பில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கொழும்பு தேர்தல் செயலகத்திற்கே கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைப்பாடுகள் நேற்று வரையான காலப்பகுதியில் 732 ஆக இலங்கை முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் கொழும்பு செயலகத்துகது மட்டும் 122 முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 44 முறைப்பாடுகள், கம்பஹா மாவட்டத்தில் இருந்து 31 புகார்கள் மற்றும் குருநாகல் மாவட்டத்தில் இருந்து 39 புகார்கள் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில், பொதுத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் செய்யப்பட்ட சட்டவிரோத நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பில் 164 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்

23ஆம் பக்கம் பார்க்க....

## காணிகளை விடுவிக்க படையினர் தயாரில்லை

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலத்தில் உண்டு கழித்த படையினருக்கு அந்த நிலங்களை சுலபமாக விடுவிப்பதற்கு விருப்பமில்லை என மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மாலை 7.30 மணியளவில் யாழ்.சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (செ-11)

## 3 பிள்ளைகளின் தந்தை கத்திக் குத்தில் பலி

### கொலைச் சந்தேக நபர் தலைமறைவு

(கரணவாய்)

கரவெட்டி துன்னாலை கிழக்குப் பகுதியில் 3 பிள்ளைகளின் தந்தை ஒருவரை மற்றொரு நபர் நேற்று முன்தினம் இரவு கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார்.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த துரைசிங்கம் - பிரசாந்த் (வயது-33) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் மேற்படி கொலையுடன் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நபரும் தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

சம்பவ தினத்தன்று இரவு 10 மணியளவில் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்த நபரும், கத்தியால் குத்திவிட்டு தலைமறைவாகிய அதே யிடத்தைச் சேர்ந்த சந்தேக நபரும் வீதியோரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்ததை அங்குள்ள பொது மக்கள் சிலர் கண்டுள்ளனர்.

திடீரென அலறல் சத்தம் கேட்ட


23ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸார் கூறி கைதியால் எழுதப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் செல்லாது

### யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்ட கைதியொருவர் பொலிஸார் தன்னிடம் சொல்லச் சொல்ல தானே தனது கைப்பட எழுதியதாகக் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு சான்றாக ஏற்க முடியாது என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்து, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்துள்ளார்.



கடந்த 1995 ஆம் ஆண்டு அரச விரோத குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டி கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரை பொலிஸார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். அப்போது அந்தக் கைதியினால் அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் எனக் கூறி பொலிஸார் வாக்குமூலம் ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இந்த வாக்குமூலம் தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் கீழ் இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சம்பந்தப்பட்ட கைதி சுயேட்சையாகவும், [illegible]

23ஆம் பக்கம் பார்க்க....

## சிங்களவரும் சிந்திக்கவே இனப்படுகொலை தீர்மானம்

### முதலமைச்சர் சி.வி கருத்து

(யாழ்ப்பாணம்)

சிங்கள மக்களும் தமிழர்கள் விடயத்தில் தெளிவு பெறவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் தான் வட மாகாணசபையில் இனப்படுகொலை தீர்மானத்தை தாம் நிறைவேற்ற வழி செய்ததாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் நீண்ட உரையில் ஒரு பகுதியில் அவர் கூறுகையில்,

அண்மையில் நாங்கள் வட மாகாணசபையில் இனப்படுகொலை பற்றிய பிரேரணையை நிறைவேற்றிய போது விக்னேஸ்வரனா இப்பேர்ப்பட்ட துவேஷம் நிறைந்த ஒரு பிரேரணையை நிறை வேற்றினான்?

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60-வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாடு நேற்று மாலை நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நினைவுச்சின்னம் ஒன்றை வட மாகாண முதலமைச்சர், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸுக்கு வழங்குவதையும், ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளுக்கு நூலின் முதல் பிரதியை வழங்குவதையும், இந்துமாமன்ற உப தலைவர் சி.தனபாலா நந்திக் கொடியினை ஏற்றுவதனையும், கலாநிதி ஆறுதிருமுருகனுக்கு சுவாமிகள் பொன்னாடை போர்த்துவதனையும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் உரையாற்றுவதனையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

படங்கள்: சோபிகா

# முன்பள்ளி ஆசிரியர் சேவையில் பொன்விழா

வலிகாமம் மேற்குப் பகுதியில் சித்தன்கேணி எனும் கிராமத்தில் மாதர் சங்க பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியராக கடந்த ஐம்பது ஆண்டுகளாக கடமையாற்றி வரும் **செல்வி. லீலாவதி மாரிமுத்து** அவர்கள் முன்பள்ளி ஆசிரிய சேவையில் பொன்விழா கண்டிருப்பது இலங்கை வரலாற்றில் ஓர் வரலாற்றுச் சாதனையாகும்.

11.02.1965 ஆம் ஆண்டு சித்தன்கேணி மாதர் சங்க பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. சித்தன்கேணியிலும் மட்டக்களப்பிலும் பெரும் புகழ் பெற்றிருந்த கொடை வள்ளல் முதலியார் வள்ளியம்மை குமாரசாமி அம்மையார் அவர்கள் சைவ சமயம் மேலோங்கவும், தமிழர் கலாசாரம் சிறப்புறவும் பெண்களின் நிலை முன்னேற்றம் அடைவதற்கும் என்ற நல்ல நோக்கங்களிற்காக மாதர் சங்கத்திற்கு நிலத்தினை அன்பளிப்புச் செய்திருந்தார். அன்றைய காலகட்டத்தில் ஊர் மக்களின் அன்பளிப்புக்களால் மாதர் சங்க கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

மாதர் சங்க கிராம அபிவிருத்தி சங்கத்தின் அன்றைய தலைவராக இருந்த திருமதி. கோமதியம்மாள் அவர்களின் நிர்வாகத்தால் ஸ்ரீகணேச வித்தியாலய ஆசிரியராக கடமையாற்றிய திருமதி இராசலட்சுமி சதாசிவம் அவர்களின் வழிகாட்டலோடு ஆசிரியர் செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்கள் பாலர் பாடசாலை ஆசிரியராக நியமிக்கப்பட்டு பாலர் வகுப்பை ஆரம்பித்தார். பத்து மாணவர்களையும் எமது சமய முறைப்படி அரியோம் நம என வித்தியாரம்பம் செய்து பாலர் வகுப்பினை முறைப்படி ஆரம்பித்து வைத்தேன் என பொறுப்பாசிரியர் செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்கள் அடிக்கடி கூறுவார்.

அன்று ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலை இன்று ஐம்பது வருடங்களை பூர்த்தி செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் ஆசிரியராக பொறுப்பேற்ற செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்கள் பொறுப்பாசிரியராக இன்றுவரை கடமையாற்றி வருகின்றார். ஒருவர் தனது சேவையில் ஐம்பது ஆண்டுகளைக் கடந்திருப்பது என்பது ஒரு சாதாரண விடயமல்ல அதற்கு தியாகம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பன அவசியமாகும். அந்த வகையில் ஆசிரியர் அவர்கள் ஒரு சாதனையாளரே.

பாலர் பாடசாலையும் தமது பொன்விழா ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இன்று வரை சுமார் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். ஆசிரியரின் மாணவர்களில் பலர் உயர் பதவிகளிலும் அரசியல்வாதிகளாகவும் கலைஞர்களாகவும் பொறியியலாளர்களாகவும் வைத்தியர்களாகவும் ஏனைய துறைசார் வல்லுநர்களாகவும் திகழ்வது ஆசிரியர் இட்ட பலமான அத்திபாரத்தினாலாகும் என்றால் மிகையாகாது.

பாலர்களுக்கான முழுமையான கல்வியை இவர் புகட்டி வருகின்றார். ஆரம்ப காலங்களில் தனியாகக் கற்பித்த ஆசிரியர் அவர்கள் மாணவர் தொகை அதிகரித்ததன் காரணமாக கடந்த பத்து பதினைந்து வருடங்களில் தான் உதவி ஆசிரியர்களையும் சேர்த்து பாடசாலையை முன்னேற்றி வருகின்றார். ஆசிரியரின் திறமையான கற்பித்தலால் மாணவர் தொகை வருடாவருடம் அதிகரித்து பொன்விழா ஆண்டிலே 101 மாணவர்களாக வளர்ந்திருக்கின்றது. இதற்கு மேலும் விண்ணப்பித்து அனுமதி கிடைக்காமல் போன மாணர்களும் ஏராளமாகும். இங்கு பாலர்களுக்கான கட்டட வசதி, விளையாட்டு உபகரணங்கள், தொலைபேசி, கணினி வசதி போன்ற எல்லா வளங்களும் பூரணமாக உள்ளது என்னும் பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் ஒன்று இல்லை. சிறிய விளையாட்டு இடமே காணப்படுகிறது.

பொறுப்பாசியர் அவர்கள் பொன்விழா காண்பது பாடசாலைக்கு மட்டுமல்ல எமது கிராமத்திற்கும் எமது மண்ணிற்கும் பெருமை தரும் விடயமாகும். இலங்கை வரலாற்றில் முன்பள்ளி ஆசிரிய சேவையில் பொன்விழா கடந்து சேவையாற்றிக் கொண்டிருப்பவர் என்றால் அது தனது வாழ்நாள் முழுவதையும் பாலர் கல்விக்காக அர்ப்பணித்த ஆசிரியர் செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்களையே சாரும்.

பொறுப்பாசிரியர் அவர்கள் பல்கலைக்கழக புகுமுக அனுமதி கிடைத்தும் அதனை விடுத்து இறைவனால் பணிக்கப்பட்ட கடமை இதுதான் என எண்ணி மன நிறைவோடும் விருப்பத்துடனும் இச்சேவையைச் செய்து வருகின்றார். அன்று முதல் இன்று வரை சம்பளத்தைப் பொருட்படுத்தாமல் தனது பணியை எதுவித குறையுமின்றி செவ்வனவே ஆற்றி வருகின்றார். ஆசிரியரின் கல்வித் திட்டத்தில் சமயம், கலை, கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றோடு ஆங்கில மொழியையும் தேவையானளவு போதிக்கின்றார். மேலும் அவரிடம் கல்வி கற்ற



மாணர்களே அவருடன் உதவி ஆசிரியர்களாகவும் பணியாற்றுகின்றமையும் ஓர் சிறப்பாகும். பொன்விழா ஆண்டிலே சர்மிலா, யுகந்தினி, தயா ளினி, நாகமீரா, அஜிதா ஆகியோரும் உதவி ஆசிரியர்களாக பொறுப்பாசிரியருடன் இணைந்து தமது சேவையை சிறப்பாக செய்து வருகின்றனர்.

பாலர் பாடசாலை பொறுப்பாசிரியர் சேவையில் செல்வி லீலாவதி மாரிமுத்து, பாலர் பாடசாலை மாதர் சங்கமும் இந்த வருடம் பொன்விழா கண்டிருப்பதால் இந்த ஆண்டு முப்பெரும் பொன்விழா ஆண்டு என்று சிறப்பாகக் குறிப்பிடலாம்.

பிரம்மஸ்ரீ.
சபா.உமாபதி சர்மா
பாலர் பாடசாலை பழைய மாணவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசு கனவை உடைத்தெறிவோம்!

## மகிந்த ஆவேசம்

(கொழும்பு)

**எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தாம் அமோக வெற்றியீட்டவுள்ளதையடுத்து மக்கள் வழங்கப்போகும் 117 ஆசனங்களை கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அரசாங்க கனவை உடைத்தெறிவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



பதுளையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி தமது ஆறு மாத கால ஆட்சியில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்களை பழிவாங்குவதை மட்டுமே தொழிலாக கொண்டிருந்தது.100 நாள் அரசாங்கத்தில் 180 நாட்கள் இவ்வாறு பழிவாங்கலுக்காகவே பயன்படுத்தப்பட்டது.

கடந்த ஆறு மாதம் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை ஆட்சிசெய்த போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஆட்சிக்கு இடையில் வேறுபாடுகளை விளங்கிக் கொண்டுள்ள மக்கள் மீண்டும் மகிந்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அவ்வாறு கோரிக்கை விடுத்தமைக்கு அமையவே தேர்தலில் மீண்டும் ஒருமுறை போட்டியிட தீர்மானித்துள்ளேன். அதனால் கடந்த ஜனவரி மாதம் நாட்டு மக்கள் விட்ட சிறு தவறை மீண்டும் செய்யக்கூடாது. அவ்வாறு முன்பு செய்த தவறை திருத்திக் கொள்ள நாட்டு மக்களுக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதனால் எதிர்வரும் தேர்தலின் பின்னர் நாம் ஐக்கிய தேசிய கட்சி தற்போது விதைத்துள்ள தேசிய அரசாங்கம் என்ற கன்வை தகர்த்து தனியாட்சியொன்று அமைப்போம் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிங்களக் கொடி வேறு தேசியக் கொடி வேறு

### பொதுபல சேனா கூறுகிறது

(கொழும்பு)

இலங்கையில் சிங்களக் கொடியான சிங்கக்கொடியை சில ஊடகங்கள் இனவாத நோக்குடன் பார்ப்பதை ஆட்சேபித்து பொதுபல சேனா நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இதன்போது கருத்துரைத்த பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே, சிங்களக்கொடி தேசிய கொடியில் இருந்து முற்றிலும் வேறுபட்டது என்று தெரிவித்தார்.

எனவே இது தொடர்பில் சர்ச்சையை ஏற்படுத்திக் கொள்ள தேவையில்லை என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் குறைகூறுவோர் நாட்டின் கலாசாரம் மற்றும் வரலாறு தொடர்பில் தெளிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

1815ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் சிங்கள சிங்கக்கொடியை 1948ஆம் ஆண்டு வாரியபொல சுமங்கல தேரர் மீண்டும் ஏற்றினார்.

இது அப்போதைய பிரதமர் டி.எஸ். சேனாநாயக்கவினால் ஏற்றிவைக்கப்பட்டது.

எனினும் அது இனவாத அடிப்படையில் பார்க்கப்படுகிறது என்று திலந்த குற்றம் சுமத்தினார். (இ-7)







# உயிரை பணயம் வைத்து பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவ வீரர்களின் உயிரைப் பணயம் வைத்து பெற்றுத் தந்த சமாதானத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அந்த இராணுவ வீரர்களின் ஆசைப்படி தேசிய மற்றும் மத நல்லிணக்கத்தை நாட்டினுள் ஏற்படுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் அமைதியான நாடொன்றை உருவாக்குவதற்காக அனைத்து மக்கள் மத்தியிலும் சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாதுகாப்பு படையினரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு பாதுகாப்பு சேவை வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இறப்பர் பாதணிகள் உற்பத்தி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பு



யாழ்ப்பாணத்தில் இறப்பர் பாதணிகளின் உற்பத்தியை வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கடந்த வியாழக் கிழமைஆரம்பித்து வைத்துள்ளார்.

வட்டு. கிழக்கு சித்தங்கேணியில் இயங்கும் அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பெண்களுக்கான ஒரு தொழில் முயற்சியாகவே இந்த இறப்பர் பாதணிகள் உற்பத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கூட்டுறவு அமைப்புகளைப் பலப்படுத்தும் திட்டங்களில் ஒன்றாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாதணிகளின் உற்பத்திக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல், சந்தைப்படுத்தல் ஆலோசனைகளை வழங்குதல், மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் போன்ற தேவைகளுக்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் 3.45 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றால் வட்டு.கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் 14 பெண்களுக்கு பாதணி உற்பத்தி தொடர்பான முழுமையான பயிற்சிகள் கடந்த ஒருமாத காலமாக வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே இப்போது உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மனதைக் கவரும் பலவித வண்ணங்களிலும், பல அளவுகளிலும் உருவாக்கப்படும் இறப்பர்ப் பாதணிகளுக்கு 'ஏஆர்பீ' (ARP - Anthiran Rubber Products) எனப் பெயரிடப்பட்டுள்ளது. மிகத்தரம் வாய்ந்ததாக உருவாக்கப்படும் ஏஆர்பீ பாதணிகள் விரைவில் சந்தைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசிய முகாம்கள் தொடர்பில் யாழ்.நீதிமன்றில் வாக்குமூலம்

## கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**காணாமற் போகச்செய்யப்பட்டார் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் இரகசிய முகாம்கள் தொடர்பில் கொழும்பு நீதவான் நீதி மன்றில் கொழும்பு குற்றப்புலனாய்வு துறையினரால் வழங்கப்பட்ட வாக்குமூலம் யாழ்.நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

காணாமற் போன லலித், குகன் ஆகியோரது வழக்கு விசாரணைகள் நேற்று முன் தினம் எடுத்துக் கொள்ளப் பட்டது. இவ்வழக்கின் போது முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல கொழும்பு ஊடக மொன்று க்கு அளித்த செவ் வியில், லலித், குகன் ஆகி யோர் காணாமல் போகவி ல்லை. அவர்கள் அரசின் பாதுகாப்பில் உள்ளதாகவும் கூறியிருந்தார். அமைச்சரின் இச் செவ்வி குறித்து விசா ரணை செய்வதற்கு அவருக்கு அழைப்பாணை ஒன்றினை நேற்று முன்தினம் யாழ்.நீத வான் நீதிமன்று அனுப்பி யிருந்தது.

குறித்த வழக்கு விசார ணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது மனு தாரர்கள் சார்பில் ஆஜரா கியிருந்த சட்டத்தரணிக ளான நிரான் அங்கிடல், நுவான் போப்பகே ஆகி யோர், அண்மையில் குற் றப்புலனாய்வு துறையின ரால் விசாரணைக்கு உட்படு த்தப்படும் இன்னொரு வழக் கில் இரகசிய முகாம்கள் உள்ளதாக கொழும்பு நீத வான் நீதிமன்றில் கொழும்பு குற்றப்புலனாய்வு துறையி னர் கூறியுள்ளனர். ஆகவே காணாமறபோன லலித், குகன் ஆகியோர் தொடர் பிலான விசாரணைகளும் இந்த இரகசிய முகாம்க ளுடன் தொடர்புபட்டதான விசாரணைகளாக முன்னெ டுக்கப்படல் வேண்டும் என மனுதாரர் தரப்பில் கேட்கப் பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட நீதவான் பெ.சிவ குமார் கொழும்பு நீதிமன்றில் சீ.ஐ.டியினரினால் சமர்ப்பிக் கப்பட்ட வாக்குமூலத்தை யாழ். நீதவான் நீதிமன்றில் சமர் ப்பிக்க நடவடிக்கை எடுக்கு மாறு தெரிவித்தார். (இ-4)

## முத்திரை வழங்கப்பட்டு 3 வருடமாகியும் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி வரணி வடக்குப்பகுதியில் உள்ள ஓலைக்குடிசை வாழ் மக்க ளுக்கு சுமார் மூன்று வருடங் களுக்கு முன் சமுர்த்தி உத்தி யோகத்தரால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் முத்தி ரைக்கு இதுவரை மண்ணெ ண்ணெய் வழங்கப்படவி ல்லை என பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

மின்சார வசதிகள் எதுவு மின்றி நீண்டகாலமாக ஓலைக்குடிசையில் வாழ்ந்து வருகின்ற இம்மக்கள் மண் ணெண்ணெய் விளக்கினை நம்பி இதுவரைகாலமும் வாழ் ந்து வருகின்றனர்.

இதேவேளை இம்மக்க ளது பொருளாதார நெருக் கடிகளை கருத்தில்கொண்டு வரணி வடக்கு சமுர்த்தி அலுவலகம் இம்மக்களுக் குரியமண்ணெண்ணெய் முத் திரைகளை சுமார் மூன்று வருடங்களுக்கு முன் வழங் கியிருந்தது.

ஆனால் இன்றுவரை அம்மண்ணெண்ணெய் முத்தி ரைக்குரிய மண்ணெண்ணை கூட்டுறவு சங்கங்களில் வழ ங்கப்படவில்லை.

இது தொடர்பாக அப்பய னாளிகளால் கூட்டுறவுச்சங் களில் கேட்கப்படுகின்ற ஒவ் வொரு தடவையும் சமுர்த்தி அலுவலகங்களின் ஊடாக இதுவரைமண்ணெண்ணெய் விநியோக அனுமதி அட்டை கூட்டுறவுச்சங்கங்களுக்கு கிடைக்கப்படவில்லை என வும்அவ்வாறுஅனுமதிஅட்டை கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் மண்ணெண்ணெய் வழங்க ப்படுமெனவும் கூட்டுறவுச்ச ங்கங்கள் ஊடாக மண்ணெ ண்ணெய் விநியோக பயனா ளிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனால் மூன்று வரு டகாலமாக கூட்டுறவுச்சங்கங் களுக்கு அப்பயனாளிகள் மண் ணெண்ணெய்க்காக அலை ந்து திரிகின்றனர்.

ஆனால் இதுவரை கூட் டுறவுச்சங்கத்தினாலும் இம் மண்ணெண்ணெய் விநியோ கம் தொடர்பாக சமுர்த்தி அலு வலகங்களுக்கு எந்தவொரு தகவலும் வழங்கப்படவி ல்லை என அப்பயனாளிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே மூன்று வருடங் கள் ஏமாற்றமடைந்து பொரு ளாதார ரீதியில் பாதிக்கப்பட் டுள்ள இம்மக்களுக்குரிய சமுர்த்தி முத்திரை மண்ணெ ண்ணெய்விநியோகத்தைவிரை வில் வழங்க நடவடிக்கை எடு க்குமாறு வரணி வடக்கு சமு ர்த்தி அலுவலகத்திற்கு சமுர் த்திப்பயனாளிகள் கோரி க்கை ஒன்றை விடுத்துள்ள னர். (இ-5)


## விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் ஆங்கில - தமிழ் மூலமான பாலர் பாட சாலையின் விளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சமா தான நீதவான் கி.சதீஸ்குமார் தலைமையில் பாடசாலை யின் மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தூர் வலி கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் நாகராசா-கும ணன் கலந்து கொண்டு சிற ப்பிக்கவுள்ளதுடன் பிரதம விருந்தினர்களாக அச்சு வேலி தேசிய சேமிப்பு வங் கியின் மேலாளர் சி.நந்த குமார், நீர்வேலி மக்கள் மருத்துவ நிலையத்தின் வைத்தியர் டாக்டர் திருமதி கணேஸ்வரன் சிவ பாக்கி யம், வலி.கிழக்கு, வட பகுதி பலநோக்கு கூட்டுற வுச்சங் கத்தின் முகாமை யாளர் எஸ்.ஸ்ரீவடிவேல், ஆவர ங்கால் கிழக்கு ஜே/276 கிராம உத்தியோகத்தர் க.அனுஜன் ஆகியோர் கல ந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக யா/உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் து.ரமேஸ், யா/அல்லைப் பிட்டி பராசக்தி வித்தியாலய ஆசிரியை திருமதி.சுவேந் திராதேவி மகேந்திரராசர, ஆனையிறவு அ.சி.த.க பாட சாலை ஆசிரியர் திருமதி எஸ்.சுகிர்தா, யா/ஆவரங் கால் மகாஜனா வித்தியாலய ஆசிரியர் திருமதி சிவநேசன் சுமித்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## முதலாவது மடல் வெளியீடு



யாழ்.மாவட்ட செயலகத் தின் இவ்வருடத்திற்கான முத லாவது செயலக மடல் அண் மையில் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனால் வெளியிடப்பட்டது.

இது யாழ். மாவட்ட செயல கம் மற்றும் பிரதேச செயலக ங்களில் இடம் பெற்ற, இடம் பெறும் அபிவிருத்தி மற்றும் விசேட சேவைகள் தொடர் பான தகவல்கள் அடங்கிய மடல் ஆகும்.

காலாண்டிற்கு ஒருமுறை மீண்டும் இவ்வருடத்திலிரு ந்து வெளியிடுவதாக மாவட்ட செயலகத்தால் தீர்மானிக்கப் பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலை யில் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் மாவட்டத்தின் முதலா வது பிரதேச செயலகமாகிய நெடுந்தீவு பிரதேச செயல கம் ஆகியவற்றின் செயற் பாடுகளை உள்ளடக்கிய இவ் வருடத்திற்கான முதலாவது செயலக மடல் ஆகும்.

இம் மடல் இலங்கையின் அனைத்து மாவட்ட செயலக ங்களுக்கும் மத்திய மற்றும் மாகாண அரசின் திணைக்க ளங்களுக்கும் அனுப்பி வைக் கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (படம்:பொ.சோபிகா)

## மழலைகள் நிகழ்வு

ஆவரங்கால் மேற்கு மத் திய முன்பள்ளியின் 41 ஆவது வருடாந்த மழலை கள் நிகழ்வு நாளை ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2மணி க்கு மத்திய முன்பள்ளி முன் றிலில் நடைபெறவுள்ளது.

மத்திய முன்பள்ளியின் தலைவர் கா.சிவசோதி தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி வலயக் கல்வி பணிப்பாளர் க.விமலநாதன், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் எஸ்.சத்தியவரதன், வலி.கிழக்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.எஸ்.பகீரதன் ஆகியோர் கலந்துகொள்வதுடன்கௌரவ விருந்தினர்களாக இதம் நிறு வன சமூகநலப்பிரிவு உத்தி யோகத்தர் சே.மயூரன், ஆவ ரங்கால் மேற்கு கிராம சேவை [illegible] வுள்ளனர். (இ-5)




## பயணிக்க முடியாத நிலையில் வீதி

(கரணவாய்)

கரவெட்டி கோவில் சந் தையில் இருந்து அத்துளு அம்மன் வரை செல்லும் வீதி நீண்டகாலமாக திருத்தப்ப டாது குன்றும் குழியுமாக காணப்படுவதாக தெரிவிக் கப்படுகிறது.

இது தொடர்பாகபலதடவை உரிய தரப்பினருக்கு தெரிவி க்கப்பட்டும் கவனிப்பாரன்றிய நிலையிலே காணப்படுகின் றது.

பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் உட்பட பல பொதுமக்கள் பயன்படுத்தும் இவ்வீதியானது இதுவரை ஏன் திருத்தப்படவில்லை என அங்குள்ள பொதுமக் கள் கேள்வி எழுப்பியுள்ள னர்.

மழை காலத்தில் குழிக ளில் உள்ள கற்கள் வெளிக் கிளம்புகின்றன.

வெயில் காலத்தில் புழு திப்படலம் வெளிக்கிளம்புகி ன்றன.

இதனால் வீதியால் பய ணிக்க முடியாத நிலை ஏற் பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை களை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர். (இ-5-60)

## தில்லையம்பல பிள்ளையார் வீதி நீண்டகாலமாக திருத்தப்படவில்லை

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்குட் பட்ட தில்லையம்பல பிள் ளையார் வீதி தொடக்கம் வரணிவரை செல்லும் வீதி யானது நீண்டகாலமாக திரு த்தப்படாது காணப்படுகிறது.

2கிலோமீற்றர் தூரம் வரை செல்லும் குறித்த வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யாமல் இருப்பது தொட ர்பாக அங்குள்ள மக்கள் பெரிதும் விசனம் அடைந்து ள்ளனர்.

குன்றும் குழியுமாக காணப்படும் இவ்வீதியூடாக இப்பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் தமது மரக்க றிகளை விற்பனை செய்வத ற்கு கொடிகாமம் சந்தைக்கு தினமும் துவிச்சக்கர வண் டியில் சென்று வருகின்றனர்.

இவ்வாறு மரக்கறிகளை கொண்டு செல்லும் விவசா யிகள் குன்றும் குழியுமாக இருக்கும் வீதியில் செல்வ தால் சில சமயத்தில் துவிச்சக் கர வண்டிகளுடன் கீழே விழும் நிலையும் ஏற்படு வதும் உண்டு என விவ சாயிகள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

எனவே குறித்த வீதி யினை போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் திருத்தித் தருமாறு பொதுமக்கள் மற் றும் விவசாயிகள் சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை ஒன்றை விடுத் துள்ளனர். (இ-5-60)

## மத்தியஸ்தர் சபைக்கூட்ட இடமாற்றம்

யாழ்ப்பாணம் வைத்தீஸ் வராக்கல்லூரியில் நடை பெற்று வருகின்ற யாழ்ப்பா ணம் மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் இன்று சனிக்கி ழமை தொடக்கம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித் தியாலயத்தில் நடைபெறும் என் சபையின் தவிசாளர் வி. ஸ்ரீசக்திவேல் அறிவித் துள்ளார்.

எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் காரண மாக சபை அமர்வுகள் இடம் மாற்றப்பட்டுள்ளன.

பரீட்சைகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் சபை அமர் வுகள் யாழ்.வைத்தீஸ்வர கல் லூரியில் வழமைபோல இடம் பெறும்.

அத்துடன் எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் என்பதால் குடாநாட் டின் அனைத்துப் பாடசாலை க ளும் தேர்தல் வாக்களிப்பு நிலையமாக செயற்படுவதை யிட்டு 16ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ள சபை அமர்வும் நடைபெற மாட்டாது என சபையின் தவி சாளர் மேலும் அறிவித் துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சித்தன்கேணி

## மாதர் சங்க பாலர் பாடசாலை முதன்மை ஆசிரியை செல்வி.லீலாவதி மாரிமுத்து அவர்களின் ஆசிரிய சேவையின் பொன்விழா அழைப்பிதழும் மலர் வெளியீடும்

01.08.2015 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் சித்தன்கேணி மகாகணபதி பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில்



**தலைவர்**
ஸ்ரீ.ஸ்ரீமதி.உமாபதிசர்மா.வாசுகி தம்பதிகள் (முகாமைத்துவக் குழுத்தலைவர்)

**பிரதம விருந்தினர்**
திரு.பூலோகசிங்கம் சிவனேசன் அவர்கள்
(பாலர் பாடசாலை பழைய மாணவன்,
பிரதிப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம்)

**ஆசி வழங்கும் குருமணிகள்**
சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
சிவஸ்ரீ.ச.மதுசூதனக் குருக்கள், பிரம்மஸ்ரீ.நா.கமலநாத சர்மா

**வாழ்த்துரைகள்**
திரு.நா.வேதநாயகன் (அரச அதிபர், யாழ் மாவட்டம்)
திரு.பா.தனபாலன்
(உபபீடாதிபதி கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்)
செல்வி.ஜெயா தம்பையா
(பணிப்பாளர், ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு, வடமாகாணம்)
திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன்
(தவிசாளர், வலி.மேற்கு பிரதேச சபை)
செல்வி.நா.நிரஞ்சனா (முன்பள்ளி இணைப்பாளர்)
திருமதி.அஜிதா சிவகரன்
(தலைவர், மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம், சித்தன்கேணி)
செல்வி.யுகந்தினி லோகேஸ்வரன்
(தலைவர்-முன்பள்ளி ஆசிரியர் சங்கம்)

**நூல்கள் வெளியீட்டுரை**
பிரம்மஸ்ரீ.குமார.சுவாமிநாதசர்மா (கவிஞர்.வீரா)

வெளியிடப்படும் நூல்கள்
1. ஆவண நூல், 2. பொன் விழா மலர்

அனைவரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பிப்பதோடு சிறப்புப் பிரதி நூல்களையும் பெற்று தொடர்ந்து நடைபெறும் மதிய போசனவிருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-1708)

மாரிமுத்து குடும்பத்தினர். முகாமைத்துவக் குழுவினர்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்.மாவட்டம்



5

ந.மதிஅழகராசா (மதி)
வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்
X 5
தமிழர் விடுதலைக் கூட்டணி
வெறும் பேச்சுக்களை நம்புபவன் தமிழன் அல்ல...

(சி-298)



# யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, தாவடி, கொக்குவில்.

**140 வது ஆண்டு நிறைவு விழா (1875-2015)**
**01.08.2015-சனிக்கிழமை காலை 9.00 மணி**

தாவடி இந்து மலர் வெளியீடு
02.08.2015- ஞாயிற்றுக்கிழமை
மாலை 2.00 மணி
சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள்
கௌரவிப்பும் கலை நிகழ்வும்.
அனைவரையும் அன்புடன்
**அழைக்கின்றோம்.**
**விழா அமைப்புக்குழு**

(273)





உலகக் குருதிக் கொடையாளர் தினம் ஜூன் 14 ஆம் திகதி சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டமைக்கு அமைவாக குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழா அண்மையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து வரும் குருதிக் கொடையாளர்களும் இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களும் கௌரவிக்கப்பட்டதுடன் 20, 30 தடவைகள் இரத்ததானம் செய்த குருதிக் கொடையாளர்களுக்கு இலங்கை தேசிய குருதி மாற்று பிரயோக சேவையால் வழங்கப்பட்ட சான்றிதழ்களும் அதற்கான நினைவுப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# ராசி பலன்

01.08.2015
(ஆடி 16, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பிரதமை பிற்பகல் 3.22 மணிவரை
திருவோணம் முற்பகல்10.08 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சுபநேரம்-3.03-4.33 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | | | சூரி செவ் புதன் |
| சந் | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

**மேடம்**
முக்கிய பிரமுகர் ஒருவர் எதிர்பாராத வகையில் தொடர்பு கொள்ளும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்**
புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்**
காலையில் தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**கடகம்**
தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**சிம்மம்**
எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கன்னி**
கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சியெடுக்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**
பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தாய் வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**தனுசு**
சகோதர வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த கருமங்களை முடிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்**
எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்**
சுப விரயங்கள் கூடும் நாள் தொழில் நலன் கருதி புதிய கூட்டாளிகளைச் சந்திக்க நேரிடலாம்,கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மீனம்**
உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பறங்கியாற்றை நீர்ப்பாசன குளங்களுடன் இணைப்போம்

## முள்ளியவளையில் பிரதமர் ரணில் உறுதி







(மல்லாவி)

வன்னியில் நடைபெற்று முடிந்த யுத்தம் காரணமாக முற்றுமுழுதாக அழிவடைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது கட்சி அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் பறங்கியாற்றினை வளப்படுத்தி அதனை நீர்ப்பாசனக்குளங்களுடன் இணைக்கவுள்ளதாக பிரதமரும் ஐ.தே.க.கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவிலுள்ள முள்ளியவளை விநாயகர் மைதானத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் மாபெரும் பிரசாரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் சிறப்பு பிரதிநிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு மக்கள் மத்தியில் வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இங்குள்ள கிராமங்கள் முழுமையான அழிவினை சந்தித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது கட்சி அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் பறங்கியாற்றை வளப்படுத்தி அதனை நீர்ப்பாசனக் குளங்களுடன் இணைப்போம்.

ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

கைத்தொழிற்சாலைகள் கைத்தொழிற்பேட்டைகள்,முதலீட்டு வலயங்கள், உல்லாச பயணத்துறையை வளப்படுத்தல். மக்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தல் போன்ற பல சமூக நலத்திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளதாக வாக்குறுதிகளை வழங்கினார்.



இதேவேளை பிரதமரின் உரைக்கு முன்னர் உரை நிகழ்த்திய பல வேட்பாளர்கள் தேசிய தலைவர் பிரபாகரனின் போராட்டம் பற்றி எடுத்துரைத்த போது அங்கு குழுமி நின்ற மக்கள் வானைப் பிளக்கின்ற வகையில் கரகோஷங்களை எழுப்பியதுடன் தமது கைகளை உயர்த்தி ஆர்ப்பரித்தனர்.

இந்நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் வர்த்தக வாணிப துறை அமைச்சர் றிசாத் பதியூதீன் உட்பட பல அரசியல் பிரமுகர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் பல்லாயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர். (2-15)

### திருக்கேதீஸ்வரம் பகுதியில் மீட்கப்பட்ட

## எலும்புக்கூடுகளின் பகுப்பாய்விற்கு 27 அமெரிக்க டொலர் தேவை

### வழக்கு ஓகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைப்பு

மன்னார் திருக்கேதீஸ்வர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளை மேலதிக பகுப்பாய்வு செய்து அறிக்கைகளை மன்றில் சமர்ப்பிப்பதற்கு சுமார் 27 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதால் இந்நடவடிக்கையை நிறுத்தி வைக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர், மன்னார் மாவட்ட நீதிமன்றத்திடம் நேற்று முன்தினம் கோரினர்.

கடந்த 2013ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரம் பகுதியில் குழாய்க் கிணறு தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, 83 மனித மண்டையோடுகள் கண்டுபிடிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டன.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குற்றப்புலனாய்வுப் பொலிஸார் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்த னர். இதனையடுத்து, இது தொடர்பான அறிவித்தலை அடுத்த தவணையில் அறிவிப்பதாக கூறிய மன்னார் நீதவான் ஆசிர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா, வழக்கினை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (2)

## பூங்காவில் கவிதை நூல் வெளியீடு

செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிடும் கவிஞர் கவிஜீ வினோ எழுதிய "என் காதல் முழுவதும் உன் இதயத்திற்கே" கவிதை நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை, வவுனியா குடியிருப்பு பூங்காவில் நடைபெறும். தமிழ் விருட்சம் செயலாளர் மாணிக்கம் ஜெகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலாளர் உதயராசா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன், நகரசபை செயலாளர் சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக கலாநிதி தமிழ்மணி அகளங்கன், தமிழ் விருட்சம் தலைவர் சந்திரகுமார், இலக்கிய ஆர்வலர் கண்ணன ஆகியோர் கலந்துகொள்வார்கள்.




வரவேற்புரையினை செல்லமுத்து வெளியீட்டக இயக்குநர் யோ.புரட்சி ஆற்ற வாழ்த்துக்கவியினை ஜொய்சி நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையினை இன்தமிழ் இனியன் வாசன் ஆற்ற ஆய்வுரையினை தமிழ்மாமன்றத்தைச் சேர்ந்த திருமதி ஜெசிந்தா ஆனந்தமூர்த்தி நிகழ்த்துவார். ஏற்புரையினை கவிஞர் கவிஜீ வினோ வழங்குவார். சிறப்பு நிகழ்வாக கவிஞர் வன்னியூர் செந்தூரன் தலைமையில் கவியரங்கமும் இடம்பெறும். (2)

## சிரமதானப் பணி முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி பயனாளிகளினால் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணிமூலம் வங்கி வளாகம் முற்றுமுழுதாக சீர் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சிரமதானப் பணியில் கண்ணகை புரம் பிரதேச வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (2-272)

## 7 வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

### சந்தேக நபரை பொலிஸார் தேடுகின்றனர்

(முள்ளியவளை)

முள்ளியவளை மாமூலையில் 7வயது சிறுமியை 55வயது நபர் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரை முள்ளியவளை பொலிஸார் வலைவிரித்து தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 27ஆம் திகதி முற்பகல் 10மணியளவில் முள்ளியவளை மாமூலையில் தாயார் சிறுமியை வீட்டில் தனிமையில் விட்டுவிட்டு வெளியே சென்றிருந்தார். இச்சந்தர்ப்பத்தில் 55 வயது நபர் ஒருவர் வீட்டிற்க்குச் சென்று சிறுமியிடம் குளவிக்கூடு ஒன்றைக் காட்டுவதாகக்கூறி அருகேயுள்ள பற்றைக்காட்டிற்குள் அழைத்துச்சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் சிறிது நேரத்தில் வீடு திரும்பிய தாயார் சிறுமியின் உடல் நிலையில் மாற்றங்களை கண்டவுடன் சிறுமியிடம் வினவியபோது சிறுமி நடந்தவை எல்லாவற்றையும் தாயாரிடம் விளக்கமாக கூறியுள்ளார் நடந்தவற்றை உணர்ந்துகொண்ட தாயார் அயலவர்களின் ஆலோசனைக்கு அமைய சம்பவ மறு தினம் முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டுள்ளார் .

இதன் பின்னர் பொலிசார் மருத்துவ பரிசோதனைக்காக சிறுமியை மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதித்துள் ளனர். சந்தேக நபரான மட்டக்களப்பைச் சேர்ந்த 55 வயதான குடும்பஸ்தர் என அறியவருகின்றது. குறித்த நபர் தலைமறைவாகிய நிலையில் பொலிஸார் அவரை கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (2-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு!

**வெற்றிச் சிகரம்**

மாதிரி வினாத்தாள்

ஆக்கம்: S.கணேசலிங்கம் - திருமலை

தொடர்வரிசையில் 10 - 20

இறுதி இதழ்கள் விற்பனையாகிறது.

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்

தொ.பே : 077 6258778



**வீடுவளவு விற்பனைக்கு!**

மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேரக்கூடிய, நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு காணி வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : நவா : 0766 686740

0061 3425808199

தவம் : 0775 977210


# APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counsellors. This is a one year, week-end (Saturday & Sunday) course that consists of 450 hours.The applicants should have the following prerequisites to apply for this course.

1.Knowledge of English as to read, write and understand

2.Passed in Advanced Level

3.Interested in Social Activities

The applicants will have to buy a special application form from our office and submit them before the 20th of August. Only 30 applicants will be selected to follow this training.

**For further details please contact:**

**"AHAVOLI"**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway**
**St.Patrick's Road, Jaffna.**
**Contact No: 021 222 2856**

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 31
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ ஜேமன் PR
தொ.இ: B/1101

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 21
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/1104

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி,பா: 14
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/1107

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 24
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BEA, MBA/ லண்டன்
தொ.இ: B/1110

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 37 செவ் 2
ல்உயரம்: 5'2"
தகைமை/தொழில்: சித்தவைத்தியர்
தொ.இ: G/1764


பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 24
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்
தொ.இ: G/1767

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 22
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/1768

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 15 செவ் 2 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/1771

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## எட்டு ஆண்டுகள் உன் நினைவுகளுடன் .....



**சகாதேவன் நிலக்ஷன்**

1985 - 2007

நானிலம் போற்ற நல்லதோர் மகனாய்
வாழ்ந்த எம் நிலாக்கண்ணா!
நாம் எண்ணி முடிக்கு முன்னே!
எம்மை விட்டுச் சென்று நீயும்
எட்டு ஆண்டுகள் எப்படித்தான் வந்ததுவோ?
எம் செல்வமே! என்றுமே நின் நினைவில்
வாழும் நாம் நின் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை வேண்டுகிறோம்

அம்மா டடா அண்ணா அண்ணி குட்டிநிலா

47 புகையிரத நிலயவீதி கொக்குவில்

## நட்புறவைப் பேணும் சந்திப்பு



ஊவா மாகாணத்திற்கும் வடமாகாணத்திற்கும் இடையிலான நட்புறவைப் பேணும் நோக்குடன் ஊவா மாகாண கல்வி அமைச்சில் இருந்து அதிகாரிகள் யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு நேற்றைய தினம் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

கல்விச் செயற்பாட்டில் நல்லெண்ணத்தை மேம்படுத்தும் நோக்கோடு கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி. வீ. சாந்தினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி ஜி.ஏ.எம்.பி. அம்பன்வல, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா, ஊவா மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர்கள், கணக்காளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், கல்வி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## வீடுக்கிருத்தியநிகழ்வு ஒத்திவைப்பு

02/08/2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருந்த எமது குடும்ப தலைவர் திரு.சு.பொ. நடராஜா (அண்ணா தொழிலக உரிமையாளர்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதிய போசன வைபவமும் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வைபவம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என்பதனை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
அண்ணா தொழிலகம், இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிலவில் தெரியும் முயல்

முன்னொரு காலத்தில், சொர்க்கத்தில் சும்மா இருந்த கடவுளுக்கு ஓர் ஆசை.

பூமியைச் சுற்றிப் பார்க்க வேண் டும் என்ற ஆசை. தாம் படைத்த மக்களின் செயறபாடுகளை மாறு வேடத்தில் சென்று பார்த்து மகிழ வேண்டும் என்ற ஆசை. அதற் காக புண்ணிய கண்டத்தை அவர தேர்ந்தெடுத்தார்.

ஒருநாள் விடியும் வேளையில், பூமிக்கு இறங்கினார். ஆண் டிக் கோலத்தில். அவர் கரங்களில் திருவோடு. அவர் இறங்கிய இடம், குக்கிராமம்.

அந்தக் கிராமத்தில் வீடு வடாகப்போய்தன் பசிக்கு உணவு கேட்டார். திருவோடு ஏந்தி தெருத தெருவாகச் சுற்றினார்.

திருவோட்டில் ஒரு பருக்கை கூட விழவில்லை. ஈவிரக்கம் என்பது எவனிடமும் இல்லை. தெருநாயை விரட்டியடிப்பதைப் போல அவரை விரட்டியடித்தனர்.

ஏமாற்றம் அடைந்த கடவுள் அந்தக் கிராமத்தைவிட்டு வெளியேறினார். உணவுக்காக ஊர் ஊராக அலைந்தார். எவனும் மனம் இரங்கி கடவுளின் பசியைப் போக்கவில்லை. அன்பு, பண்பு, பாசம், மனிதநேயம் போன்ற அருங்குணங்கள் மக்களிடம் இல்லாதது கடவுளுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

புத்தரையும் புனிதர்களையும் பூமிக்கு அனுப்பி வேத சாஸ்திரங்களையும் அறிவுரைகளையும் வழங்கியும் மனிதர்கள் திருந்தவில்லையே என்று மனம் வருந்தினார் கடவுள்.



நொந்து போனவர், பசியும் பட்டினியுமாக ஒரு நகரத்துக்கு வந்தார். நகரத்திலும் அவர்மீது இரக்கப்பட எவனும் இல்லை.

பசி மயக்கத்தில் கண்கள் பஞ்சடைந்து கால்கள் தள்ளாடியபோதுதான் பூமிக்கு வந்தது எவ்வளவு பெரிய தவறு என்பது அவருக்குப் புரிந்தது.

அப்போது அவரைப் போன்ற ஒரு பிச்சைக்காரன் தெம்பாக வயிற்றைத் தள்ளிக் கொண்டு, ஏப்பம் விட்டபடி எதிரே• வந்து கொண்டிருந்தான்.

அவனை ஆச்சரியத்துடன் பார்த்த கடவுள், 'இந்த நகரத்தில் உனக்கு யாரப்பா உணவு கொடுத்தது?" என்று கேட்டார்.

அதற்கு அவன், 'மடையா! எந்த மனிதனும் இன்னொரு மனிதனுக்கு உதவமாட்டான். எல்லோருமே சுயநலத்தோடு வாழ்பவர்கள். உன் பசிக்கு உனக்கு உணவு தேவையென்றால் காட்டுக்குப் போ.

அந்தக் காட்டில் மூன்று பாசக்கார நண்பர்கள் இருக்கிறார்கள். ஒரு குரங்கு, ஒரு நரி, ஒரு முயல். மூன்றும் தான் நான் சொல்லும் அந்த நண்பர்கள். அந்த மூன்று மிருக ங்களிடமும் மனிதர்களிடம் நீ பார்க்க முடியாத நல்ல குணங் கள் அனைத்தும் இருக்கின்றன.

நீ பசியால் வாடுவதைப் பார்த்துக் கொண்டு அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். உயிர் பிழைக்க ஆசை இருந்தால் உடனே போ" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் அவன்.

உடனே கடவுள் நகரத்தை விட்டு வெளியேறினார். அடிவானத்தில் தெரிந்த மலைத்தொடரை நோக்கி நடந்தார்.

நடக்க நடக்க மலை விலகிப் போய்க் கொண்டே இருந்தது. அந்தப் பிச்சைக்காரன் சொன்னது உண்மையாக இருக்குமா? என்ற சந்தேகம் கடவுளுக்கு வந்துவிட்டது. மாலை வரை நடந்த கடவுள் ஒருவழியாக காட்டை அடைந்துவிட்டார். ஒரு பாறையைப் பார்த்ததும் அதன் மீது உட்கார்ந்தார். அவரால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. பசி களைப்பு, கால்களில் வேதனை.

எங்கிருந்தோ அவரைப் பார்த்துவிட்ட குரங்கு, நரி, முயல் மூன்றும் அவரிடம் ஓடிவந்தன. அவரை அன்பாக வரவேற்றன.

கடவுள் அந்த மூன்று நண்பர்களையும் பார்த்து, "நான் காலையிலிருந்து பட்டினி.

உணவுக்காக நான் சுற்றாத ஊர் இல்லை. எனக்கு பிச்சை போட எந்த மனிதனுக்கும் மனமில்லை. பசி உயிர் போகிறது." என்றார்.

உடனே குரங்கு, "கவலைப்படாதீர்கள் ஐயா. சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறீர்கள். ஒரு பத்து நிமிடம் பசியைப் பொறுத்துக் கொள்ளுங்கள். எங்களால் முடிந்ததைக் கொண்டு வந்து தருகிறோம்" என்றது.

(தொடரும்)




- 1619 - முதலாவது ஆபிரிக்க அடிமைகள் வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரை அடைந்தனர்.
- 1774 - ஒக்சிசன் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1800 - பெரிய பிரித்தானிய இராச்சியம், அயர்லாந்து இராச்சியம் ஆகியன பெரிய பிரித்தானியா, அயர்லாந்து ஐக்கிய இராச்சியம் என்ற பெயரில் இணைந்தன.
- 1820 - லண்டனில் ரீஜண்ட் கால்வாய் திறக்கப்பட்டது.
- 1831 - புதிய லண்டன் பாலம் திறந்து வைக்கப்பட்டது.
- 1876 - கொலராடோ ஐக்கிய அமெரிக்காவின் 38 ஆவது மாநிலமாக ஏற்கப்பட்டது.
- 1894 - கொரியா தொடர்பாக சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் போர் தொடங்கியது.
- 1902 - பனாமா கால்வாயுக்கான உரிமையை ஐக்கிய அமெரிக்கா பிரான்சிடமிருந்து வாங்கியது.
- 1902 - ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் வொலொங்கொங் நகரில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 100 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1907 - சாரணிய இயக்கத்தின் முதல் பாசறையை பேடன் பவல் இங்கிலாந்தில் பிறௌன்சி தீவில் ஆரம்பித்து வைத்தார். இது ஆகஸ்ட் 9 வரை நீடித்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி ரஷ்யாவுடன் போர் தொடுத்தது.
- 1914 - இலங்கையில் மன்னாருக்கும் மதவாச்சிக்கும் இடையில் பகல் நேர தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1936 - பெர்லினில் 11 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாயின.
- 1941 - முதலாவது ஜீப் வண்டி உருவாக்கப்பட்டது.
- 1952 - தந்தை பெரியார் தொடருந்து நிலையங்களில் இந்தி அழிப்புப் போராட்டத்தைத் துவக்கி வைத்தார்.
- 1960 - டஹோமி (பெனின்) பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1960 - பாகிஸ்தானின் தலைநகராக இஸ்லாமாபாத் அறிவிக்கப்பட்டது.
- 1964 - பெல்ஜிய கொங்கோவின் பெயர் கொங்கோ குடியரசு எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1967 - கிழக்கு ஜெருசலேம் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டது.
- 1980 - அயர்லாந்தில் இடம்பெற்ற தொடருந்து விபத்தில் 18 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - தமிழ்நாட்டில் பழ. நெடுமாறன் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.
- 2004 - பரகுவேயில் பல்பொருள் அங்காடி ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 396 பேர் கொல்லப்பட்டு 500 பேர் காயமடைந்தனர்.
- 2007- யாழ்பல்கலைக்கழக ஊடக மாணவன் ச.நிலக்சன் அவரது வீட்டில்வைத்து படுகொலைசெய்யப்பட்டார்

பிறப்புகள்

- 1876 - டைகர் வரதாச்சாரியார், கருநாடக இசைக் கலைஞர் (இ. 1950)
- 1924 - அப்துல்லா, சவூதி அரேபிய மன்னர் (இ. 2015)
- 1929 - ஹஃபிசுல்லா அமீன், ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி (இ. 1979)
- 1946 - குப்பிழான் ஐ. சண்முகம், ஈழத்து எழுத்தாளர்
- 1949 - குர்மான்பெக் பாக்கியெவ், கிர்கிஸ்தான் ஜனாதிபதி

இறப்புகள்

- 1920 - பால கங்காதர திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1856)
- 2008 - ஹர்கிஷன் சிங் சுர்ஜீத், இந்திய மாக்சிய கம்யூனிசத் தலைவர் (பி. 1916)
- 2009 - கொரசோன் அக்கினோ, பிலிப்பைன்ஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் (பி. 1933)

சிறப்பு நாள்


- உலக சாரணர் நாள்




2007- யாழ்.பல்கலைக்கழக ஊடக மாணவன் ச.நிலக்சன் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஏவுகணைகள்= அமெரிக்கப் பத்திரிகைகள்







நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் 15 ஆண்டுகள் (1990-2005) வெளிநாட்டு நிருபராகவும், மத்திய அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் பத்திரிகையாளராகவும் பணியாற்றிய அனுபவம் மிகுந்த கிரீஸ் வெட்ஜஸ், இஸ்ரேலுக்கு ஆதரவான கருத்துக்கள் எப்படி திணிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியும் அதற்கு பத்திரிக்கையாளர்கள் எவ்வாறு நிரப்பந்திக்கபடுகிறார்கள் என்பதைப் பற்றியும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

பெப்ரவரி 13 அன்று இங்கிலாந்தைச் சேர்ந்த 100 கலைஞர்கள் பாலஸ்தீன மக்களை ஆதரித்தும், இஸ்ரேலுடையேயான கலாச்சார உறவுகளை புறக்கணிப்பதாகவும் கார்டியன் பத்திரிகைக்கு ஒரு கடிதத்தை எழுதி இருந்தனர். இதுவரையிலான கொடூரமான ஆக்கிரமிப்புகளில் ஒன்றான இதன் மூலம் பாலஸ்தீன மக்களது வாழ்வாதாரம் முற்றிலும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர். இஸ்ரேலின் தாக்குதல் பாலஸ்தீன மக்களின் வாழ்வாதாரங்களை பாதிப்பதுடன் குறிப்பாக அவர்களது கலாசார அடையாளங்களை குறிவைத்தும் நடத்தப்படுகிறது என்று குற்றம் சாட்டியிருந்தனர்.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் வேறு மதத்தினரது கலாச்சார அடையாளங்களை அழித்தொழிப்பதாக கூறிக் கொண்டு அமெரிக்க மற்றும் இஸ்ரேல் அரசுகள் கடுமையானத் தாக்குதலை மேற்கொண்டு அப்பாவி மக்களை அழித்துக் கொண்டு இருக்கும் அதே வேளையில் ஊடகங்கள் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இந்த இனவழிப்பு குறித்த உண்மைகளை மறைத்தோ அல்லது ஹமாஸ் அமைப்பினரது தாக்குதல்களை மிகைப்படுத்தியோ பொதுப்புத்திக்குள் புதைத்து விடுகின்றன.

அமெரிக்காவின் நடவடிக்கைகளின் பின்விளைவுகள் பெற்றெடுத்த பிள்ளைகள் தாம் அல்கைதா, ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற தீவிரவாத அமைப்புகள் என்று தமது சொந்த நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய தார்மீகக் கடைமையை ஊடகங்கள் கைகழுவிக் கொண்டுள்ளன.

ஈராக்கின் மீதான தனது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த புஷ் கூறிய வார்த்தைகள், "ஈராக்கை நிராயுதபாணியாக்கி, அதன் மக்கள் விடுவிப்பது மற்றும் உலகைக் காப்பது" என்பவை உலகெங்கும் உள்ள ஊடகங்களில் திரும்பத் திரும்ப விளம்பரப்படுத்தப்பட்டன. தன்னை ஒரு மீட்பனாக அறிவித்து தீவிரவாதத்திற்கு எதிரான போருக்கு உலகுத் தழுவிய பிரசாரத்தை கட்டவிழ்த்துவிட்டது அமெரிக்கா. ஈராக் என்ற ஒரு பெரும் புதை குழியில் அமெரிக்க பொருளாதாரம் புதையும் வரையில் அது நீடித்தது. அதன் பின்னர் சொந்த நாட்டு மக்களின் எதிர்ப்புப் போராட்டம் காரணமாகவும் பொருளாதார ரீதியிலான கடுமையான பின்னடைவு காரணமாகவும் மண்ணைக் கவ்வி பின்வாங்கியது.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்த பம்மாத்து, தீவிரவாதிகளை அழிப்பதில்லை மாறாக அவர்களை உருவாக்கத்தான் செய்கிறது. அல்கொய்தா தீவிரவாத அமைப்பினரை உருவாக்கிய அமெரிக்கா பின்னர் அதன தலைவர் பின்லேடனை அழிப்பதற்காக போர நடத்தியது மட்டுமல்லாமல் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பினருக்கு புரவலராக அமெரிக்கா இருந்து வருவதும் அம்பலமாகியிக்கின்றது.


அமெரிக்க ஊடகங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை பற்றி அதன் மக்களை அச்சமூட்டி வரும் அதே நேரத்தில், அதன் உருவாக்கத்தில் அமெரிக்காவின் பங்கைப் பற்றி அமைதி காத்து வருகின்றன. இந்த ஆண்டில் ஜூன் மாதம் வரை 100 பேர்களின தலையைத் துண்டித்து படுகொலை செய்த அமெரிக்காவின் விசுவாசியான சவூதி அரசின் காட்டுமிராண்டி செயல்களை கண்டும் காணாமல் இருக்கும் ஊடகங்கள் ஐ.எஸ். ஐ.எஸ் இன் படுகொலைகளை பற்றி எழுத எந்த ஒரு தர்க்க நியாயமுமில்லை.

ஐ.எஸ் தலையை துண்டிக்கும் வீடியோவை காட்டும் அமெரிக்க ஊடகங்கள், அதனடிப்படையில் அமெரிக்க அரசின் சித்திரவதை சிறைகளை நியாயப்படுத்துகின்றன. ஆனால், தலை துண்டிக்கப்படும வீடியோவில், அந்த படுகொலைகள், அமெரிக்க அரசின் அபு கரீப் சிறை சித்திரவதைகளுக்கு எதிர்வினை என்று கொலையாளிகள் கூறுவதை வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்து விடுகின்றன.

ஜூலை, 6 காலைப் பொழுதில் வடக்கு யேமன் துறைமுக பகுதியில் சவுதி-அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகளின் வான்வெளித் தாக்குதலால் 45 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். 50 இற்கும் மேலான அப்பாவி மக்கள் படுகாயமுற்றனர். ஏழை நாடான யேமனைத் தாக்குவதற்கு அரேபியாவிற்கு அமெரிக்கா ஆதரவளிக்கிறது. தமது சொந்த அரசின் இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளை அமெரிக்க மக்களுக்கு தெரியப்படுத்த இந்த ஊடகங்கள் தவறுகின்றன.

உலகெங்கும் உள்ள ஜனநாயகவாதிகள், மனித உரிமை அமைப்புகள் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் பயங்கரவாத செயல்களை அம்பலபடுத்தி வந்தாலும் அவை பெரும்பாலும் பொது மக்களின் செவிகளுக்கு எட்டுவதில்லை. வெகுஜன ஊடகங்கள் பெரும்பாலும் கார்பரேட் முதலாளிகளுக்கு சொந்தமாக இருப்பதால் அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல்களால் சிதறுபட்ட அப்பாவி மக்களின் இரத்தத் துளிகள் தாம் இம் முதலாளிகளின் பத்திரிகைகளின் "எழுத்து மையாகவே" மாறுகின்றன.

-இணையம்- (முற்றும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-201



...நான் என்ன பண்ணுவேன்! அழுது கத்துறான் கட்டையன்.

நிதானம் தப்பி நின்னவ நில குலஞ்சு போனா. அவன் போட்ட சத்தத்துல என்னா நடக்குது ஏது நடக்குதுன்னே அவ புத்திக்குள்ள போய் ஒறைக்கல. காலப் புடிச்ச கைய ஒதறிப் பாக்குறா; மிசுங்க முடியல.

எந்திரி மாமா எந்திரி! எங் கால விடு. நீ சீர் கெட்ட ஆளாயிருந்தாலும் சிங்கமில்லையா. சிங்கம் விழுகலாமா சிறுக்கி கால்ல...? எந்திரி.

அவ குனிஞ்சு அவனத் தூக்கப் போனா; அவன் ஒதறி ஓடி ஒதுங்கிப்போனான்.

என்ன நடக்குது... எங்கயிருக்கான்..? ஒரு எழவும் தெரியல இருட்டுல.

இவ எங்க நிக்கிறா? அவன் எங்க இருக்கான்? ஒண்ணும் புடிபடல. மாமா நீ எங்க இருக்க? தீபம் எங்க இருக்கு?

ஒரு பதிலும் காணோம்; அவன் உருவத்தையும் காணோம். திக்திக்குன்னு துண்டாத் துடிக்குது இருதயக் கூடு. இந்தத் தீப்பெட்டிய எங்கன்னு தேடுவேன்?

முப்பத்தேழு வருசத்துக்கு முன்னுக்க அவ பொழங்குனவீடுதானே! எடதுபக்கச் சுவத்துல இருக்கு மாடக்குழி. அங்கதான் வழக்கமா வைக்கிறது தீப்பெட்டிய. கைய வீசிவீசிச் சுவரத் தடவுறா.

இப்ப கட்டையன் குரல் கேக்குது; உன் காலப்புடிச்சு அழுகணுமன்னு நெனச்சேன்; அழுதுட்டேன் போயிரு.

தீப்பெட்டி தேடிச் சுவரத் தடவித் தடவிப் போன வெரலு மாடக்குழியில விழுந்திருச்சு.

தீப்பெட்டியும் தட்டுப் பட்ருச்சு; குச்சிகமட்டும் ஒண்ணோ ரெண்டோ அது அழுது நனஞ்சிருக்கு.

வந்த வேல முடிஞ்சிருச்சு ஆத்தா. நீ போயிரு. காலம்போன கடைசியில தான் இருக்கும் போலருக்கு.

ஒரு குச்சிய ஒரசி உள்ளங்கைக் கூட்ல அணவு பண்ணி அது அணையு முன்னா காடா வெளக்கு எங்கன்னு கண்டுபுடிச்சா. திரிகிட்டப் போக அணைஞ்சு போச்சு தீக்குச்சி. ஊர்லயிருக்கிற சாமிகளையெல்லாம் கும்புட்டு, குலதெய்வத்தக் கூப்பிட்டு என்னியக் கைவிட்றாதீக சாமிகளான்னு ஏத்தினா ரெண்டாங்குச்சிய. இருட்ட எரிச்சிட்டுத் திரியில போயி உக்காந்திருச்சு தீக்குச்சி. இப்பக் காடா வெளக்கக் கையில எடுத்திட்டா. வெளிச்சத்தையும் கண்ணையும் அங்கங்க அலைய விடுறா.

ஒத்தக்கல்லால் ஒடைஞ்சு கெடக்கு அவ படுத்த பழைய கட்டிலு; அந்தக் கட்டிலுக்குள்ள அடங்காம மொனையில தொங்குது பல்லுப்போன பாயி. மூலையில பிரிமணமேல கெடக்கு அட்டஞ்சாச்ச ஒரு மஞ்சட்டி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்- 55

# சேதன விவசாய பிரகடனமும் பனை அபிவிருத்தி வாரமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வடபகுதியின் அபிவிருத்திக்குள்ளே சேதன விவசாயத்தை முன்னெடுப்பதும் பனையும் பனை சார்ந்த அபிவிருத்தியினை உள் வாங்குவதும் அவசியமானதாகும். விவசாய செய்கையில் அளவுக்கதிகமான அசேதன இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்ட நிலையில் தற்போது சேதன விவசாயத்தை விரைந்து முன்னெடுப்பது பற்றி பரவலாக பேசப்படுவது நல்லதொரு மாற்றம் எனக் கூறலாம். கடந்த மாதம் மூன்று முக்கியமான விடயங்கள் நடந்தேறியிருக்கின்றன. ஒன்று வட மாகாண ஆளுநர் தலைமையில் வடமாகாண விவசாய, கால் நடைகள், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பொது நூலகத்தில் நடைபெற்ற சேதன விவசாயத்தை பற்றிய கலந்துரையாடல் ஆகும். இதில் கலந்து கொண்டவர்களில் சிறப்புக்குரியவர்களாக தென்மாகாண ஆளுநரும் மேல்மாகாண ஆளுநருமாகும். மூன்று மாகா ணங்களின் ஆளுநர்கள் இணைந்த இக்கருத்தரங்கில் தென்மாகாண ஆளுநர் தனது கலாநிதி பட்டப் படிப்பை சேதன விவசாயத்தில் செய்திருந்தமையை சுட்டிக்காட்டி அவர்கள் ஏனைய ஆளுநர்களையும் இணைத்து எமது நாட்டில் சேதன விவசாயத்தை முனைப்புடன் முன்னெடுப்பதற்கு முனைந்துள்ளமையை மனந்திறந்து பாராட்டவே வேண்டும்.

இதற்கு வடமாகாண ஆளுநர் முன்னுதாரணமாக இதுசார்ந்த அனைத்து உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்து சேதன விவசாயம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கினை நடத்தியது சிறப்புக்குரியதாகும். சேதன விவசாயம் பற்றி நிறையவே பேசிக்கொண்டிருக்கின்றோம். இன்னும் பத்திரிகைகளில், வானொலிகளில் இன்னும் தொலைக் காட்சியில் பலவற்றை அறிந்து கொண்டும் இருக்கின்றோம். ஆனால் சேதன விவசாய செய்கையின் விஸ்தீரணமும் அதனது சந்தை வாய்ப்பும் அதிகரித்ததாக இல்லை. எங்கோ என்னவோ நடந்திருக்கின்றது என அறிய முடிகின்றதல்லவா. யார் பூனைக்கு மணிகட்டுவது என்பதே பிரச்சினையாக இருக்கின்றது. எவர் எப்படி செய்தாலும் பலமுறை பயிற்சி வகுப்புக்களை நடத்தினாலும் குறிப்பாக விவசாய திணைக்களத்தின் பங்களிப்பு இதுவிடயத்தில் அளப்பரியது என்றே குறிப்பிடலாம். கண்காட்சிகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் என பலவற்றை நடத்தினாலும் அவை அந்தளவிலே நின்றுவிடுவது தான் கவலைக்குரிய விடயமாகும்.






தற் போது ஆளுநர் அலுவலகமும் மாகாண விவசாய அமைச்சும் இணைந்து இந்த கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பது இதனை விரைந்து செயலாற்ற கிடைத்த நல்ல சந்தர் ப்பமாக கருதலாம். சேதன விவ சாய உற்பத்தியில் வடமாகாண ஆளுநர் காட்டும் சிரத்தை அனை வரினதும் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு.. 53-XLII

இரண்டாவது முக்கியமான நிகழ்வாக பனை அபிவிருத்தி வாரமும் (22-28 ஜூலை) அதனுடனிணைந்த பனை அபிவிருத்தி ஆய்வரங்கும் ஆகும். வடமாகாண விவசாய அமைச்சினால் மறைந்த மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி கனகராசாவை நினைவுபடுத்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்தி வாரமும் அதனுடனான அபிவிருத்தி ஆய்வரங்கும் குறிப்பிட்டு சொல்லக்கூடியனவாகும்.

வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசனின் இந்த முயற்சியும் பாராட்டப்படவேண்டியதாகும். எந்தவிதமான அரசியல் கலப்புமின்றி ஆய்வரங்காகவே நடத்தி முடித்ததை இங்கே சுட்டிக்காட்டுதல் அவசியமாகும். நல்ல செயல்களை ஊர்கூடி பாராட்டுதல் தகும். மறைந்த பெருமகனார் கனகராசா உள் ளூர் உற்பத்தியை [illegible] இதில் சமூக சேவைகளை [illegible] றுதற்குரிய வள்ளல் ஆவார். எமது சொந்த உற்பத்தியை உருவாக்கி அதனை பெருக்கி வட மாகாண தொழிற்றுறை விருத்தியை ஒரு காலத்தில் உயர்த்தி உலகுக்கு காட்டியவராவார். இவர்களெல்லாம் எமது வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டிகளும் வரலாற்று ஆசிரியர்களுமாவர். இவாகளின் வரலாறு பாடமாக வேண்டும.

மூன்றாவதாக மறைந்த பெருமகனார் அப்துல் கலாமை பற்றியது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அவரை நேராக காணும் பாக்கியம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதுவராலயத்தின் உதவியுடன் பலருக்கு கிட்டியது. அன்னாரது கருத்துக்கள், கதைகள், வாழ்வியல், சிந்தனை, செயலாற்றல் என்பன அனைவருக்கும் அவசியம் பாடமாக அமைய வேண்டும்.

அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் போல அனைத்தும் முத்துக்களாக வந்து கொண்டிருக்கின்றன. அவரின் இழப்பினை அனைவரும் உணர்ந்த அதிசயம் நடந்தேறியிருக்கின்றது. உண்மையிலேயே எங்களில் ஒருவரை இழந்த உணர்வு இன்னமும் உள் ளுறுத்திக்கொண்டிருக்கின்றது. அவர் எங்களில் ஒருவர். எமக்காகவே வாழ்ந்தார். சொன்னவற்றை செய்தார், செய்து காட்டினார், செய்து பார் என்று கேள்வியும் விடுத்தார். அவரின் ஒவ்வொரு சொல்லும் தீர்க்க தரிசனமாக செயலுக்கியாக அனைத்து இளையவர்களையும் கட்டியிழுத்திருக்கின்றது. ஒரு விஞ்ஞானியின், குடியரசு தலைவரின், பெருமகனாரின், சிறந்த ஆசிரியரின் சிந்தனைகளெல்லாம் முன்னுதாரணமாக எம்முன் எழுந்து நிற்கின்றன. முயன்று பார் முடியும் என்றார். இந்திய நாட்டை தலையுயர்த்தி வைத்த பெருமைக்குரியவர். எமக்கெல்லாம் உதாரண புருஷனானவராவார். வானியல் தொழில் நுட்பத்தின் காவலன், தொழில் வளர்ச்சியின் உந்துசக்தி. இந்து மதத்தினரை கௌரவித்து குத்து விளக்கினை, கிறிஸ்தவ மதத்தின் மெழுகுதிரியை பயன்படுததி தானொரு முஸ்லிமாக நின்று ஏற்றியதை விளக்கி மதங்களின் ஒற்றுமையை எடுத்துக்காட்டிய தீர்க்க தரிசியாவார்.

இவை மூன்றையும் இணைத்துப்பார்த்தால் எமது பிரதேசத்து வளத்தினை நாம் பாதுகாப்பதும் வினைத்திறனாக பயன்படுத்துவதோடு நஞ்சற்ற உலகத்தை நாம் அனைவரும் படைக்க முடியும் என்பதனை சொல்லாமல் சொல்லிச்சென்றிருக்கின்றார்.

சேதன விவசாயத்தை முன்னெடுப்பது எமது எதிர்கால சந்ததியினருக்காகவும் அனைவரும் சுகதேகிகளாக வாழ்வதற்கேயாகும். இதற்கான விடை பனைசார் அபிவிருத்திக்குள்ளே உள்ளார்ந்திருக்கின்றது. எமது வளமான, அடையாளமான பனையையும் பனை சார்ந்த அபிவிருத்தியையும் வடபகுதியில் முன்னெடுப்பது சிறப்புக்குரியது. பனையை குறிப்பாக வடலிகளை 'பெக்கோ' இயந்திரத்தை பயன்படுத்தி பிடுங்கியெறிந்து விட்டு தென்னை நடுவதனை ஏ-9 பாதையூடாக பயணிக்கும் போது முகமாலை இயக்கச்சிப்பகுதிகளில் அவதானிக்கலாம். இரண்டும ஒரே குடும்பத்தை சார்ந்தவைகளாக இருக்கின்றபோதும் பனையை அகற்றி தென்னையை நடுவது பனைக்குரிய முக்கியத்துவத்தை நாமே கொடுக்காதது போல இருக்கின்றதல்லவா.

இங்கேதான் பனை பற்றிய விடயங்கள் மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். கடந்த வருடம் பூமி வரண்டு நீரின்றி தவித்த போது பல இடங்களில் தென்னைகளெல்லாம் காய்ந்து இறந்து விட்டன.

ஆனால் அந்தந்த இடங்களில் பனை எது வுமே இறக்கவில்லை. இதனை அற் ந்தாவது இனியாவது பனையை அவசியமின்றி அகற்றுவதை தவிர்க்க வேண்டும்.

பனை என்பது தனியான மரமல்ல. அது ஒரு சூழல்தொகுதி. அதற்குள்ளே பல உயிர்களின் சங்கமம் நடந்தேறுகின்றது. பனை என்பது எமது அடையாளமும் வாழ்வியலுமாகும். அதனை விழுத்தியும் முறித்தும் அவ்வப் போது பலர் முனைந்தும் இன்றும் பனை பனையாக உயர்ந்து நிற்கின்றதனை காணலாம். பனை வளத்தை பாதுகாக்க சட்டமும் இதற்கு உதவிடவேண்டும். பனையுடன் சம்பந்தமான ஆய்வுகளின் முடிவுகளை தமிழில் மக்கள் அனைவரும் அறிந்திட ஆவணப்படுத்த வேண்டும். வெள்ளி விழா கொண்டாடும் விவசாய பீட மாணவர் ஒன்றியத்தினருக்கான வேண்டுகோள் இது.

பனை சார்ந்த அபிவிருத்திக்குள்ளே சுற்றுலாத்துறை முழுமையாக உள்வாங்கப்பட முடியும். சுற்றுலாத்துறையின் மேம்பாட்டில் பனைசார் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் நிச்சயமாக இந்த வளத்தை நாம் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள முடியும். எமது வளத்தை நாமே பாதுகாத்து எம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற பெரியவர் அப்துல் கலாமின் வார்த்தைகள் என்றும் எமக்கான திறவுகோல்களாக கொண்டு எமது பிரதேசத்தை வளர்த்தெடுத்து நாமும் உலகில் சிறப்புக்குரியவர்களென தொழிற்றுறையிலும் வளர்ந்து காட்டுவோம்.

வாரு ங்கள் எம்மினிய உறவுகளே! நாளை உலகம் எமக்கானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியை பிரிவினையாக திரிபுபடுத்துவதற்கு முயற்சி

## பாக்கியசோதி சரவணமுத்து குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டியென்ற பிரிவினை கோரிக்கை உள்ளதாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்ட பொய் என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் இணை ஏற்பாட்டாளர் டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.**



கடந்த காலத்தை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்ல முயற்சிக்கின்றது எனக் கூறி ஒரு தரப்பினரைப் பயமுறுத்துவதற்கே இவ்வாறான திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி முறையிலான இலங்கைக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட இலங்கை அல்ல. எனினும், பிரிக்கப்படாத இலங்கைக்குள் சமஷ்டி முறை பற்றியே கூறப்பட்டுள்ளது. அதில் பிரிவினை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையென பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான கட்சி இலங்கை தமிழரசுக் கட்சி. இது சமஷ்டி கொள்கையை கடைப்பிடிக்கும் கட்சியாகும். அப்படியான கட்சி சமஷ்டிக்கு பரிந்துபேசாமல் இருக்க முடியாது. மீண்டும் பழைய நிலைக்கே அவர்கள் செல்லப்போகிறார்கள் என மக்களை அச்சமூட்டுவதற்காக திரிபுபடுத்தப்பட்ட பொய்யே த.தே.கூ பிரிவினை கோருவதாக முன்வைக்கப்படும் கருத்து என்றும் அவர் கூறினார். சமஷ்டிக் கொள்கை என்பது பிரிவினையைக் கோருவது அல்ல. இவ்வாறான கருத்துக்கள் முட்டாள் தனமானவை. இதற்கு மக்கள் வாக்குகள் மூலம் பதில் சொல்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம், அரசியல் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் இனரீதியான பிரசாரங்கள் துரதிஷ்டவசமானவை. இதனை தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் வாக்காளர்கள் அதற்கான சிறந்த பதிலை வழங்குவார்களென்றும் சரவணமுதது மேலும் தெரிவித்தார். (இ-7)

# உ/த.பரீட்சை நிலையங்களுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் தரப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 23ஆம் திகதி, 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையும் இடம்பெறவுள்ளது. அனைத்து பரீட்சைகளும் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி முடிவுக்கு வருகின்றன.

இந்நிலையில், பரீட்சை முறைகேடுகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்காக பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

பரீட்சை எழுதும் மாணவர்களை குழப்பும் வகையில் வேட்பாளர்கள் பிரசாரத்தை மேற்கொள்ளுதல், ஒலிஎழுப்புதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 200 |
| தக்காளி | 150 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 60 | 100 |
| கரட் | 120 | 120 | 200 |
| பூசணி | 60 | 40 | 60 |
| புடோல் | 50. | 40 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 50 | 60 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 200 | 120 |
| போஞ்சி | 180 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 30 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 200 | 140 | — |
| வெங்காயப்பூ | 100 | 150 | 200 |
| முள்ளங்கி | 40 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 449


நஸ்ரியா துலானி

பத்தாவது முறையாகக்
கீழே விழுந்தவனைப்
பார்த்து பூமி
முத்தமிட்டுச் சொன்னது
நீ ஒன்பது முறை
எழுந்தவன் என்று...!!!

மாஸ் கஜாலி




யாழினி கனகலிங்கம்





பிரணவன் தயானந்தன்



இப்ப நீ
தான்
கண்டு
பிடிக்கணும்

சுதர்சினி மயூரன்




செல்வா கோபி

வீரம்னா என்ன தெரியுமா???




ரிசல்ட் வந்தாலும்
பயம் இல்லாத மாதிரி நடிக்கிறது

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் எதிர்பார்ப்பு?




ராஜபக்ச இலங்கையின் பிரதமராகினாலும் கூட, இவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த போது செயற்பட்டது போன்று பலமுள்ள ஒருவராகத் தன்னைக் காண்பிக்க முடியாது.

இவ்வாறு dailyo இணையத் தளத்தில், SEEMA GUHA எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கு இன்னமும் மூன்று வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில் அங்கு பல்வேறு எதிர்வுகூற முடியாத அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கைத் தீவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மிகவும் வெற்றிகரமாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளார். ஆகஸ்ட் 17 அன்று இடம்பெறவுள்ள தேர்தலில் எவர் வெற்றி பெறுவார் என்பது தொடர்பில் எவரும் உறுதியுடன் தெரிவிக்கவில்லை.

இதற்கும் மேலாக, தற்போது இத்தேர்தலை நடத்த வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது. ஏனெனில் வரும் செப்ரெம்பர் மாதத்தின் இறுதியில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைப் போரில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய அறிக்கை வெளியிடப்படவுள்ளது.



இந்நிலையில் இந்த அறிக்கையிலிருந்து இலங்கைத் தரப்பைக் காப்பாற்றுவதற்கு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

செப்ரெம்பர் அறிக்கை வெளியிடப்படும் போது இலங்கையில் புதிய நாடாளுமன்றமும் புதிய பிரதமரும் பதவியேற்றிருப்பார்கள். சிலவேளைகளில் மகிந்த ராஜபக்ச புதிய பிரதமராக பதவி வகிக்கலாம்.

மகிந்த ராஜபக்ச கடந்த ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் இவர் தற்போது மீண்டும் அரசியலுக்குள் நுழைந்துள்ளார்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் கீழ் மகிந்த ராஜபக்ச தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதியை சிறிசேன வழங்கியதானது முன்னாள் ஜனாதிபதி தற்போதும் இக்கட்சியில் செல்வாக்கு மிக்க ஒருவராகவே உள்ளார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இலங்கை சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடக் கூடாது என்பதற்காகவே சிறிசேன, ராஜபக்சவுக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஏனெனில் இலங்கை சுதந்திரக் கட்சி தோல்வியுற்றால் ஐக்கிய மக்கள் கட்சிக்கு ஆட்சியமைப்பதற்கான வாய்ப்பை வழங்கிவிடும் என சிறிசேன கருதியதாலேயே ராஜபக்ச தற்போது தேர்தலில் போட்டியிடுகிறார்.

மகிந்த ராஜபக்ச மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதியளிக்க மாட்டேன் என முன்னர் சிறிசேன உறுதியளித்த போதிலும் சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் ராஜபக்ச அதிகளவில் ஆதரவைக் கொண்டிருந்ததால் சிறிசேனவால் இவரை மிக இலகுவாகத் தட்டிக் கழிக்க முடியவில்லை.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ராஜபக்சவின் முதலாவது தேர்தல் கூட்டத்தில் பெருமளவான மக்கள் பங்கேற்றிருந்தனர். தான் கட்டியெழுப்பிய பல்வேறு விடயங்களை கடந்த ஆறு மாதங்களில் தற்போதைய அரசாங்கம் அழித்தொழித்து விட்டதாகக் கூறுவதே ராஜபக்சவின் பிரதான தேர்தல் பரப்புரையாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கமானது கடந்த 20 ஆண்டுகளாக எதிர்க்கட்சியாகவே செயற்பட்டது. இதனால் ஆறு மாதங்கள் மட்டுமே ஆட்சியைத் தக்கவைக்க முடிந்துள்ளது. இந்த அரசாங்கத்தால் தொடர்ந்தும் சுமைகளைத் தாங்கமுடியவில்லை என ராஜபக்ச தனது பரப்புரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்ததற்காக ராஜபக்சவை சிங்களக் கடும்போக்காளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர். அத்துடன் ராஜபக்ச ஒரு சிங்களக் கதாநாயகனாகவே உருவகிக்கப்படுகிறார். ராஜபக்ச புலிகளை முற்றாக ஒழித்திருப்பினும் இவர் தனது குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் அதிகாரங்களைக் குவித்திருந்தார்.

இதனால் இவருக்கு எதிராகப் பல்வேறு ஊழல் மோசடிகள் முன்வைக்கப்பட்டன. இதன் பயனாக இவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்பார்த்திராத அளவுக்கு அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன, ராஜபக்சவின் அரசாங்கத்தின் கீழிருந்த ஒரு அமைச்சராவார். இவர் பொது எதிரணியின் ஆதரவுடன் ஜனாதிபதி தேர்தலில் 51.28 வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

சிறுபான்மைத் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் சிறிசேனவை ஆதரித்து வாக்களித்தனர். ஆனால் ராஜபக்ச இத்தேர்தலில் 47.58 வீத வாக்குகளைப் பெற்றார். ஆகவே முன்னாள் ஜனாதிபதியான ராஜபக்சவுக்கு தற்போதும் உறுதியான வாக்குப் பலம் உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்சவின் விசுவாசிகள் வெற்றி பெற்றால், இலங்கை சுதந்திரக் கட்சிக்குள் சில முடிவுகளை எடுப்பதற்கு சிறிசேன எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டியேற்படும்.

இதற்கான சாத்தியத்தை இல்லாதொழிப்பதற்கான நகர்வை அரசியல் யாப்பில் சிறிசேன சீர்திருத்தியுள்ளார். இதனால் ராஜபக்ச எளிதில் தேர்தலில் வெற்றிபெறுவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

ராஜபக்ச கடந்த ஜனவரித் தேர்தலில் தோல்வியுற்றபோது இதனை உலகின் பல்வேறு ஜனநாயக நாடுகள் வரவேற்றன. இந்தியா, அமெரிக்கா ஆகியன மிகவும் மகிழ்வடைந்தன. சிறிசேன அரசாங்கத்திற்கு தமது ஆதரவை வழங்க முன்வந்தன.

ஐ.நா அறிக்கையைத் தாமதப்படுத்துமாறு அமெரிக்கா பரிந்துரைத்தது. இது சிறிசேன அரசாங்கத்திற்கு மிகவும் உதவியாக இருந்தது. இது உண்மையில் மார்ச் மாதம் வெளியிடப்பட வேண்டும். ஆனால் சிறிசேனவுக்கு இது தொடர்பில் மேலும் கால அவகாசம் தேவை என்பதால் இதனைத் தள்ளிப்போடுவதற்கு அமெரிக்கா உதவியுள்ளது.

சிறிசேன, சீனாவிற்குத் தனது முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளாது இந்தியாவிற்குப் பயணம் செய்ததன் மூலம் இந்திய அரசாங்கத்தின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டார். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட 2009 இலிருந்து விரிசலடைந்திருந்த இந்தியாவுடனான உறவு சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மீண்டும் நெருக்கமாகியது.

இந்தியா- இலங்கை உறவில் விரிசல் ஏற்படுவதற்கு சீனா மிக முக்கிய காரணியாகும். சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு ராஜபக்ச அனுமதியளித்தார். இது ஒரு தடவையல்ல இரண்டு தடவைகள் இடம்பெற்றன.

இது இந்தியாவை அதிருப்திக்குள்ளாக்கியது. சீனாவின் இந்திய மாக்கடல் மீதான செல்வாக்கானது இந்தியாவின் பாதுகாப்பிற்கும் மூலோபாய நலன்களுக்கும் குந்தகம் விளைவிக்கும் என இந்தியா கருதுகிறது. இந்திய மாக்கடலில் சீனா செல்வாக்குச் செலுத்துவதானது இந்தியாவிற்கு பெரும் சவாலாக எழுந்துள்ளது.

இந்நிலையில் ராஜபக்ச மீண்டும் சிறிலங்காவின் ஆட்சியில் அமர்ந்தால் சீனக் கடற்படையினரின் பிரசன்னம் மீண்டும் சிறிலங்காவில் அதிகரிக்குமா?

ராஜபக்ச சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணியிருந்தார். 1987 இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம், இவ்விரு நாடுகளினதும் துறைமுகங்களை வேறெந்த சக்திகளும் பயன்படுத்த அனுமதிக்க முடியாது.

இதனைக் கருத்திற்கொண்டே இலங்கையின் புதிய அரசாங்கம் சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் மற்றும் போர்க் கப்பல்கள் இலங்கையில் தரித்து நிற்பதற்கு அனுமதியளிக்கவில்லை.

சீனர்களால் உடன்படிக்கை செய்யப்பட்ட 1.5 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்பு துறைமுக நகரத் திட்டமானது சிறிசேனவால் இடைநிறுத்தப்பட்டது. இத்திட்டம் உட்பட சீனாவால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்டு சிறிசேன அரசாங்கத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இவை தவிர, 13 ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டவாறு தமிழ் மக்களின் அவாக்களை ராஜபக்ச தீர்க்க முன்வரவில்லை. ராஜபக்ச சிறிதளவேனும் சிறுபான்மையின மக்களின் பிரச்சினையைக் கருத்திலெடுக்கவில்லை.

பதிலாக, தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் வடக்கு மாகாணத்தில் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் இராணுவத்தினலரால் கையகப்படுத்தப்பட்டன. ராஜபக்சவின் காலத்தில் வடக்கு மாகாண ஆளுநராக முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ராஜபக்ச பிரதமராகினால் மீண்டும் இத்தகைய பிரச்சினைகள் தோன்றுமா என்பதே தற்போதைய கேள்வியாகும். ஆனால் சிறிசேன தற்போதும் ஜனாதிபதியாக உள்ளதால் சீனாவுடன் ராஜபக்ச தொடர்பைப் பேணுவது அவ்வளவு இலகுவானதல்ல.

ஐ.நா அறிக்கை வெளியிடப்படும் போது ராஜபக்ச மிகவும் விழிப்பாகச் செயற்படுவார். ஏனெனில் இலங்கையில் தொடரப்பட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும் என சிறிசேன மேற்குலக நாடுகளிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

ஆகவே சிறிசேன, ராஜபக்சவைக் காப்பாற்றுவதை விட உலக நாடுகளிடம் அளித்த வாக்கைக் காப்பாற்றுவதிலேயே அதிக கவனம் செலுத்துவார். மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ராஜபக்சவிடம் தொடர்ந்தும் அழுத்தம் இடப்படும்.

ராஜபக்ச இலங்கையின் பிரதமராகினாலும் கூட, இவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த போது செயற்பட்டது போன்று பலமுள்ள ஒருவராகத் தன்னைக் காண்பிக்க முடியாது. ராஜபக்ச தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்த முடியுமா என்பதைக் கூற முடியாது.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசிய முன்னணி சமஷ்டிக்கு இணங்காது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு சமஷ்டி அரசாங்கத்தை கோரியுள்ள போதிலும் ஐக்கிய தேசிய முன்னணி அதற்கு இணங்காது என வெளி விவகார பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார.**

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கியமான நாட்டுக்குள் உச்சமான அளவில் அதிகாரத்தை பரவலாக்குவது தொடர்பான யோசனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அதேவேளை மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பை எந்த விதத்திலும் மாற்றப் போவதில்லை என தாம் கூறியுள்ளதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞானபத்தை வெளியிடும் முன்னர், ஐக்கிய தேசிய முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பு மாற்றப்படாது என கூறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களும் ஒரு நாடாக வாழும் சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்யும் எந்த விடயத்திற்கும் இணங்கப் போவதில்லை என்றும் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்ட பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்பு

மகிந்த அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டு வந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு தகுந்த வேலை வாய்ப்புக்கள் அரசதுறை மற்றும் தனியார் துறைகளில் ஏற்படுத்திக் கொடுக்க ஐ.தே.மு. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

காலி மாவட்டத்தின் ரத்கம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற ஐ.தே.முவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீட்டுக்குச் சென்று அவர்களை அழைத்து வந்து ஒரு வேலை வாய்ப்பை வழங்கும் அளவுக்கு கிராமப் புறங்களில் பட்டதாரிகள் இருக்கின்றார்கள். அரசாங்க தொழிலொன்றைப் பெறுவதே அவர்களுடைய எதிர்பார்ப்பாகும்.

அரச சேவையில் பல இலட்சக் கணக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கினோம். பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கினோம் என வாய்க்கு வந்தவாறு பொய்யானவற்றை கூறினாலும் எத்தனையோ இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். இவர்கள் அவிழ்த்துவிட்ட கட்டுக்கதைகளின் உண்மை நிலைகளைக் கண்டறிய கிராமப் புறங்களுக்குச் சென்று பார்க்க வேண்டும.

காலி மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு அமைச்சரவை அந்தஸதுள்ள அமைச்சர் நான் ஒருவன் தான் என்பதால் என்னை சந்திக்க தினமும் மக்கள் வருகிறார்கள். பொதுமக்களை சந்திப்பதற்கு மூன்று தினங்களை ஒதுக்கியுள்ளேன்.

என்னிடம் வருபவர்களில் 95 வீதமானவர்கள் வேலைவாய்ப்பு கேட்டே வருகிறார்கள். தங்களுடைய படிப்புக்கும் தங்களுடைய தகுதிக்கும் உரிய வேலைவாய்ப்பு கிடைக்கவில்லையென அவர்கள் கூறுகிறார்கள். இந்த இளைஞர், யுவதிகளைப் பார்க்கும் போது நீண்டகாலமாக மன அழுத்தங்களுக்கு உள்ளானவர்களாகத் தெரிகிறது.

எங்களது நூறுநாள் வேலைத்திடடத்தின் கீழ் மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான வாக்குறுதி வழங்கப்பட்டதே தவிர வேலைவாய்ப்பு வழங்கப்படுவதாக கூறப்படவில்லை. என்றாலும் இந்த இளைஞர், யுவதிகளின் கஷ்ட நிலையை போக்க பாரியளவில் இல்லையென்றாலும் சிறு சிறு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு எங்களால் முடிந்தது என்பதையெண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.ம.சு.முன்னணி அதிக ஆசனங்களை கைப்பற்றும்

## டிலான் பெரேரா நம்பிக்கை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிக ஆசனங்களை கைப்பற்றும் என்று கருத்து கணிப்புகளில் உறுதயாகியுள்ளதாக முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த கருத்து கணிப்பு அறிக்கையை அரச ஊடகங்களில் வெளியட வேண்டாம் என பிரதமர் ரணில விக்கிரமசிங்க ஊடக தலைமை அதிகாரிகளிடம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முந்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா இதனை கூறியுள்ளார்.



இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஒரு ஊடக நிறுவனத்தின் தலைவர் அவ்வாறு செய்ய முடியாது. அனைத்து தரப்புக்கும் இணையான சந்தர்ப்பம்வழங்கப்பட வேண்டும்என தெரிவித்தார்.

ஊடக நிறுவனத்தின் அந்த தலைவர் இடைநடுவில் எழுந்து சென்றுள்ளார். அவர் முதுகெலும்பு உள்ளவர் என்றால், தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வார்.

குறித்த ஊடக நிறுவனத்தின் தலைவர் முதுகெலும்பு பலத்துடன் பணியாற்ற சக்தி கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். தொடர்ந்தும் நல்லாட்சி அரசாங்கத்திடம் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டால் அவர் பதவியில் இருந்து விலக தைரியம் கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்பதாகவும் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## தன்னை உணர்ந்த நிலை

இராம கிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது.

ஒரு ஓவியர் இருந்தாராம். அவருக்கு ஒரு ஆசை "அதாவது இராமகிருஷ்ணரின் படத்தை வரைய வேண்டும். அதை அவரிடமே கொண்டுபோய் காட்டி அபிப்பிராயம் கேட்க வேண்டும்'' இதுதான் அந்த ஓவியரின் ஆசை.

உடனே, இராமகிருஷ்ணரின் படத்தை வரைந்து முடித்தார். அதை எடுத்துக் கொண்டு போனார். இவர் போன சமயம் அங்கே இராமகிருஷ்ணர் சீடர்களுடன் உட்கார்ந்திருந்தார்.

அங்கு விவேகானந்தரும் இருந்தார். இந்த ஓவியர் கொண்டு போய் இராமகிருஷ்ணரிடம் தான் வரைந்த ஓவியத்தை காட்டினார்.

இராமகிருஷ்ணர் என்ன செய்தார் தெரியுமா? அந்தப் படத்தை பார்த்தார். உடனே அதன் காலைத் தொட்டார்.

குரு தேவருடைய இந்தச் செயல் சீடர்களுக்கு வியப்பை உண்டு பண்ணியதாம். சிலபேர் மனதுக்குள்ளேயே குழம்ப ஆரம்பித்து விட்டார்களாம்.

"என்ன இது... அவரே அவருடைய படத்தின் காலைத் தொடுகிறார்" என்று யோசித்தார்கள். சில பேர் ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

இந்த இடத்தில் சீடர்கள் மட்டுமல்ல சீடரல்லாத பலரும் இருந்தார்கள்.

"தன்னுடைய காலைத் தானே தொடும் இவருடைய செயலைப்பற்றி என்ன நினைக்கிறது?" என்று அவர்களும் குழம்பிப் போய் நின்றார்கள். அந்தப் படத்தை வரைந்து அவரிடம் காட்டிய அந்த ஓவியருக்கும் அதிர்ச்சி.

இருந்தாலும் அவர் சீடரல்ல.

அதனால் கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

என்ன இது என்னால் என் கண்களையே நம்ப முடியவில்லை. இது உங்களுடைய சொந்த உருவப்படம். நீங்கள் உங்கள் சொந்தக் கால்களையே தொடுகிறீர்கள். இது எங்களுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது என்றார்.

இராமகிருஸ்ணரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்ததாம். அவர் சொன்னாராம்: இது என்னுடைய படம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இது என்னுடைய படம் என்பதால் நான் இதன் காலைத் தொடவில்லை. நீ என்னுடைய சமநிலையை இந்தப் படத்தில் படம் பிடித்தக் காட்டியிருக்கிறாய். அதனால் அதன் காலைத் தொடுகிறேன். சமநிலையில் யார் இருந்தாலும் அது என்னுடைய படமாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாருடைய படமாக இருந்தாலும் சரி படம் யாருடையதென்பது முக்கியமில்லை. இதில் எது முக்கியம் என்றால் அது தன்னை உணர்ந்த ஒரு உணர்வு நிலையின் படம். அப்படியிருக்கும் போது அதனுடைய காலை நான் தொடவேண்டும். அதற்கு நீங்கள் எல்லோரும் ஏன் சங்கடப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை என்றாராம்.

இப்பொழுது தான் அங்கிருந்த சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் விபரம் புரிந்ததாம்.

இதற்கு முன்பு யாரும் செய்யாததை இவர் செய்திருக்கிறார். ஆனால் அவருடைய காரணம் மிகவும் நியாயமானது என்பதை உணர்ந்தார்களாம். இதுவரைக்கும் ஆன்மீகத்தில் சமநிலை அதாவது தன்னை உணர்ந்த நிலை பற்றி புரிந்து கொண்டோம்.

இல்லறத்தில் ஏற்படக்கூடிய சமநிலை பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஒரு அம்மா டாக்டரிடம் வந்து சொன்னார்களாம். டாக்டர், என் வீட்டுக்காரருக்கு உடம்பில் ஏதோ கோளாறு என்று நினைக்கின்றேன். நான் எவ்வளவு நேரம் பேசினாலும் காதில் விழாதது மாதிரி உட்கார்ந்திருக்கிறார் என்றாராம். அதற்கு அந்த டாக்டர்,

அது உடம்புக் கோளாறு இல்லையம்மா. அது பெரிய திறமை என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாளே.. இறந்த நாளான சோகம்!



யாகூப் மேமன் தனது கர்ப்பிணி மனைவி ராஹினைக் கராச்சியில் விட்டுவிட்டு காத்மாண்டுவில் இருக்கும் திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தில் ஜுலை 1994 இல் சரணடைந்தார். ராஹினுக்கு துபாயில் குழந்தை பிறந்தது. தானும் குழந்தையும் யாகூபுடன் மறுபடியும் சேர்ந்து புதுடெல்லியில் புதுவாழ்க்கை தொடங்கலாம் என்ற நம்பிக்கையில் இருந்தார் அவர்.

"நான் மனசாட்சி உள்ள மனிதன். டைகரின் தவறான செயல்களிலிருந்து என்னைத் துண்டித்துக கொள்ள விரும்பினேன்" என்றார் யாகூப் மேமன். அது 1998 இல் நடந்தது. அப்போது நான் மும்பையில் பத்திரிகையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். 'பிளாக் ஃபிரைடே' என்ற எனது புத்தகத்துக்காக ஆய்வு மேற்கொண்டிருந்தேன். யாகூபைச் சந்தித்தபோது, தனது கதையைப் பகிர்ந்துகொள்வதில் ஆர்வமாக இருந்தார். ஆனால், விசாரணை முடிவதற்கு முன் அந்தக் கதையை நான் எழுதப்போய், அதனால் இந்த வழக்குக்கு ஏதாவது குந்தகம் ஏற்படுமோ என்று அவர் பயந்தார். அவ்வப்போது தெளிவற்ற சில தகவல்களை உதிர்ப்பார். அவற்றை நான் பின்தொடர்ந்து சென்றால், மிகவும் முக்கியமான தகவல்களாக அவை இருக்கும்.

புத்திசாலித்தனமான, மனசாட்சியுள்ள மனிதர் யாகூப். சார்ட்டர்டு அக்கவுன்டன்டாக இருந்திருக்கிறார். இந்து மதத்தவரான தனது பங்குதாரர் சேத்தன் மேத்தாவுடன் இணைந்து வெற்றிகரமான நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார். சிபிஐ இற்கு யாகூப் அளித்த வாக்குமூலத்தின்படி, மும்பை தொடர் குண்டுவெடிப்புகளைப் பற்றி அவர் முதன்முதலில் கேள்விப்பட்டது, துபாயில் இருந்தபோது 1993 மார்ச் 13 அன்று மாலை 4 மணிக்கு பிபிசி செய்திகள் மூலமாகத்தான்.

**பாகிஸ்தானில் சிறைவைப்பு**

துபாயில் இருந்த ஒட்டுமொத்த மேமன் குடும்பமும் குண்டுவெடிப்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அதிர்ந்துபோனார்கள். டைகர் மேமன் மட்டும் விதிவிலக்கு. அவர் அந்தக் குண்டுவெடிப்புகளைக் கொண்டாட விரும்பினார். துபாய் அரசு அந்தக் குடும்பத்தினரை அவசர அவசரமாக இந்தியாவுக்கு அனுப்பிவிடுமோ என்ற அச்சத்தில் அவர்கள் பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டியிருந்திருக்கிறது. அங்கே அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை டைகர் செய்திருந்தார். கராச்சியில் வெவ்வேறு மாளிகைகள், இராணுவக் குடியிருப்புகள் என்று அவர்கள் மாற்றப்பட்டுக்கொண்டேயிருந்தார்கள். எனினும், டைகர் மேமனையும் அயூப் மேமனையும் தவிர, ஒட்டுமொத்த மேமன் குடும்பத்தினருக்கும் இப்படிச் சிறைவைக்கப்பட்டிருப்பது குறித்துத் துளியும் விருப்பமில்லை. அவர்கள் தாய்நாடு திரும்புவதற்கு ஏங்கிக்கொண்டிருந்தார்கள்.

யாகூப் ஒன்றும் துணிச்சல் மிக்கவர் அல்ல. ஆனால், ஒரு நொடியில் ஏற்படும் துணிவுதான், துணிச்சலான நபரையும் கோழையையும் வேறுபடுத்துகிறது. தனது கொடிய சகோதரனையும் ஐஎஸ்ஐயையும் மீறிக்கொண்டு, எல்லாவற்றையும் எதிர்கொண்டு இந்தியா திரும்புவதென்ற முடிவை அவர் தீர்க்கமாக எடுத்தார். மும்பை குண்டுவெடிப்பில் தொடர்புடைய ஐஎஸ்ஐ யின் முக்கியப் புள்ளியான தௌஃபிக் ஜாலியாவாலாவுக்கு எதிரான ஆதாரங்களைத் திரட்ட ஆரம்பித்தார்.

ரகசிய இடங்களை வீடியோ எடுத்துக் கொண்டார். புகைப்படங்களும் எடுத்துக் கொண்டார் உரையாடல்களையெல்லாம் பதிவு செய்துகொண்டார். பிறகு, போலி பாஸ்போர்ட்டுகள், பாகிஸ்தான் அரசு வழங்கியிருந்த வெவ்வேறு அடையாள அட்டைகள் போன்ற ஆவண ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டார்.

தனது பயணப்பெட்டி முழுவதும் ஆதாரங்கள் நிரம்பியதும், காராச்சி-காத்மாண்டு-துபாய்- காத்மாண்டு- கராச்சி என்று சுற்றுவழி பயணச்சீட்டை லுஃப்தான்ஸா விமானத்தில் எடுத்துக்கொண்டார். அவர் திரும்பி வருவார் என்ற உறுதியில் ஐஎஸ்ஐ ஆட்கள் அவரது பயணத்துக்கு முட்டுக்கட்டை போடமாட்டார்கள் என்ற நம்பிக்கையில்தான் இப்படி ஒரு ஏற்பாடு.

இந்தியாவுக்கு நேரடியாகப் போக முடியாதென்பது யாகூபுக்குத் தெரியும். பாகிஸ்தான் அதிகாரிகளும் துபாய் அதிகாரிகளும் கூட்டாளிகள் என்பதால், துபாயில் சரணடைவது என்பது மிகவும் ஆபத்தாக முடிந்துவிடும். நேபாளம் இந்தியாவுக்கு நெருக்கமான நாடு என்று அவர் நினைத்ததால் காத்மாண்டுவைத் தேர்ந்தெடுத்தார். நம்பகத்தன்மை கொண்ட ஒரு தவறை அவர் வேண்டுமென்றே செய்ய நினைத்தார்.

பாதுகாப்புப் பரிசோதனையின்போது யாகூப் தனது பெட்டியைத் திறப்பதற்காக வேண்டுமென்றே தடுமாறியபோது, நிறைய பாஸ்போர்ட்டுகள் பெட்டியிலிருந்து சிதறிக் கீழே விழுந்தன. அதிகாரிகள் பிடித்தார்கள். யூசுஃப் அஹமத் என்ற பெயரில் சென்றிருந்த அவர் தனது உண்மையான பெயர் யாகூப் மேமன் என்ற உண்மையை, தான் பிடிபட்ட உடனேயே வெளிப்படுத்தினார். ரகசிய ஏற்பாட்டின்படி 48 மணி நேரத்துக்குள் அவர் இந்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டார். சிபிஐ தரப்பு கூறும் விளக்கம் சற்றே மாறுபடுகிறது. பாதுகாப்பு அதிகாரிகள் யாகூபின் பெட்டியில் துப்பாக்கி போன்ற ஏதோ ஒன்றைக் கண்டதாகவும் அதனால் பெட்டியைத் திறந்துகாட்ட அவர்கள் கேட்டதாகவும் அப்போதுதான் பாஸ்போர்ட்டுகள் சிதறி விழுந்தன என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

நேபாளத்தில் கைதுசெய்யப்பட்ட பிறகு, நேபாள எல்லைக்கு அருகே யாகூப் விடப்பட்டார். தனி விமானம் ஒன்றில் அங்கிருந்து புதுடெல்லி அழைத்துவரப்பட்டார். புதுடெல்லி ரயில் நிலையத்தில் அவர் கைதுசெய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அப்படியெல்லாம் ஏதும் தன் வாழ்க்கையில் நிகழவேயில்லை என்று தான் எழுதிய கடிதமொன்றில் யாகூப் தெரிவிக்கிறார்.

வெகு விரைவில் யாகூப் எல்லா இடங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டார். சில வாரங்களுக்குள், யாகூப் மேமனின் உதவியோடு, மேமன் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களையும் துபாயிலிருந்து இந்தியாவுக்கு வரச்செய்தது சிபிஐ. யாகூப் கைதுசெய்யப்பட்டதும் மேமன் குடும்பத்தினரின் மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் அவர்களுடைய முந்தைய திட்டத்தின்படி இந்தியாவுக்குத் திரும்பலாம் என்ற நம்பிக்கையில் துபாய்க்குச் சென்றிருந்தனர்.

பரபரப்பான ஒரு நடவடிக்கையின் மூலம் மேமன் குடும்பத்தினரை ஐஎஸ்ஐ யின் கண்காணிப்பிலிருந்து சிபிஐ அதிகாரி கள் அப்புறப்படுத்தினார்கள். பின்தொடரும் ஐஎஸ்ஐ ஆட்களை ஏமாற்றிவிட்டு, மேமன் குடும்பத்தினரில் எட்டுப் பேரை இந்தியாவுக்கு சிபிஐ அழைத்துவந்தது. எட்டு பாகிஸ்தான் பாஸ்போர்ட்டுகளில் சில நிமிடங்களுக்குள், அதுவும் விண்ணப்பதாரர்களைச் சந்திக்காமலேயே, இந்திய விசாக்களுக்கான முத்திரை இடப்பட்டது இந்திய வரலாற்றிலேயே இதுதான் ஒற்றை நிகழ்வாக இருக்கலாம். டைகர், அயூப், அவர்களின் மனைவியர் ஆகியோர் தவிர, ஒட்டுமொத்த மேமன் குடும்பமும் திரும்பிவந்துவிட்டார்கள். ஒரு மாதக் குழந்தை ஜுபைதாவைக் கைகளில் ஏந்திய ராஹினும் சில நாட்களுக்குப் பிறகு அவர்களோடு சேர்ந்துகொண்டார்.

மன்னிப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையில் ஒட்டுமொத்த நடவடிக்கையும் சாத்தியமானது ஒரே ஒரு மனிதரின் அசாத்தியமான துணிவாலும் உறுதியாலும்தான்: அவர்தான் யாகூப் மேமன். கிட்டத்தட்ட சாத்தியமே இல்லாத இந்தப் பணியை நிறைவேற்றியதற்குப் பரிசாகத் தண்டனைக் குறைப்பும் மன்னிப்பும் கிடைக்கும் என்று யாகூப் எதிர்பார்த்தார். ஆனால், அரசு அவர் மீது தாக்குதல் நிகழ்த்த ஆரம்பித்தது. சிறையில் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். 'என்கவுன்ட்டர்' செய்யப்போகிறோம் என்று சொல்லி, ஆள் நடமாட்டம் இல்லாத இடத்துக்கும்கூட ஒரு முறை அழைத்துப்போயிருக்கிறார்கள். ஆனால், தொலைக்காட்சியிலும், ஆரம்பத்தில் தன்னைக் கையாண்ட சிபிஐ அதிகாரிகளிடமும் சொல்லியவற்றைத் தவிர, சொல்வதற்கு யாகூபிடம் வேறு எதுவும் இல்லை.

தண்டனை நிறுத்தி வைக்கப்படும் என்று அவர் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார். வாரங்கள் மாதங்களாகின, மாதங்கள் ஆண்டுகளாகின, ஆண்டுகள் தசாப்தங்களாகின. இப்போது அவர் தூக்கிலிடப்பட்டார். ஒட்டுமொத்த விசாரணையிலும் பெரிய இழப்பு யாகூபுக்கு என்பதுதான் இதில் முரண்பாடான விடயம். இந்திய விசாரணை முகமைகளுக்கு ஏராளமான ஆதாரங்களை அவர் கொடுத்து உதவியிருக்கிறார். அதனாலேயே, இந்தத் திட்டத்தின் மூளை என்று கடைசியில் ஆக்கப்பட்டிருக்கிறார். ஒருமுறை டைகர் மேமனும் யாகூப் மேமனும் அனல்பறக்க விவாதித்தபோது, டைகர் மேமன் யாகூபிடம் சொல்லியிருக்கிறார், "காந்தியவாதியாக இந்தியாவுக்கு நீ போகிறாய், ஆனால் கோட்சேவாக நீ இந்தியாவில் தூக்கிலிடப் படுவாய்". இதற்கு யாகூப் மேனன் இப்படிப் பதிலடி கொடுத்தார், "நீ சொன்னது தவறு என்பதைக் கடைசியில் நான் நிரூபிப்பேன்."

இந்த உலகில் டைகர் மேமன்கள் சொல்வதெல்லாம் உண்மையாகிவிடுவதும் யாகூப்களெல்லாம் தூக்கு மேடைக்கு அனுப்பப்படுவதும்தான் பெரும் துயரம்!

-தி இந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகோஹறாம் கொடூரம்

## நைஜீரியாவில் 10 மீனவர்கள் கழுத்தறுத்து படுகொலை




**நைஜீரியாவில் 10 மீனவர்களின் கழுத்தை போகோ ஹறாம் தீவிரவாதிகள் அறுத்து படுகொலை செய்த சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் ஏராளமான கடற்கரை கிராமங்கள் உள்ளன.

இந்நிலையில் அங்குள்ள மூன்று கிராமங்களில் புகுந்த போகோஹறாம் தீவிரவாதிகள், மீனவர்கள் 10 பேரை பிடித்து அவர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்துள்ளதாக கூறப்படுகிறது.

உள்ளூரை சேர்ந்த மக்களும் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதுகுறித்து மீனவர் ஒருவர் கூறியதாவது "போகோஹறாம் தீவிரவாதிகள் நேற்று மாலை மூன்று கிராமங்களின் மீது தாக்குதல் நடத்தினர். பின்னர் அவர்கள் மீனவர்களின் கழுத்தை அறுத்து கொடூரமாக கொலை செய்தனர் என்று தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் போகோ ஹறாம் தீவிரவாதிகள் அப்பாவி கிராம மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# தனது இன்னுயிரை மாய்த்து இளைஞன் கலாமுக்கு அஞ்சலி

(திருப்போரூர்)

அப்துல் கலாம் மறைந்த சோகத்தில் திருப்போரூர் இளைஞர் ஒருவர் **உயிர் அஞ்சலி செலுத்துகிறேன்** என்று கூறி தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

நேற்றுக் காலை அவருடன் பணி புரியும் ஊழியர் ஒருவர் அவர் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தார். அப்போது கதவு உட்பக்கமாக பூட்டி இருந்தது. நீண்ட நேரம் கதவை தட்டியும் திறக்கவில்லை. சந்தேகம் அடைந்த அவர் ஜன்னல் வழியே பார்த்த போது அங்குள்ள மின்விசிறியில் சுப்பிரமணி (வயது-27) தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கிடந்தார்.

உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் வீட்டில் சோதனை செய்த போது சுப்பிரமணி எழுதி வைத்து இருந்த உருக்கமான கடிதம் சிக்கியது. அதில் எழுதப்பட்டிருப்பதாவது.

நான் இந்த முடிவை எடுத்ததற்கு முதலில் என்னுடைய அப்பா, அம்மா, அண்ணன் மற்றும் என் இனிய உறவினர்கள், என் இனிய ஆருயிர் நண்பர்கள் அத்தனை பேரும் மன்னிக்கவும்.

நான் ஏன் இப்படி செய்தேன் என்று எனக்கு புரியாத புதிராகத்தான் இருக்கிறது. காரணம் நான் மிகவும் நேசித்த கலாம் ஐயா அவர்களின் இறப்பு என்னை மிகவும் பாதிப்படைய வைத்து விட்டது.

இந்தியாவை உலக நாடுகளுக்கு முன்னால் தலை நிமிர வைத்த அந்த அற்புத மாமனிதர் கலாம் ஐயா. அவர் இறந்ததற்கு கடந்த மூன்று நாட்களாக இந்தியாவே குறிப்பாக தமிழகமே சோகத்தில் மூழ்கியது.

என் வயதிற்கு இப்படிப்பட்ட எளிமையான, தூய்மையான மாமனிதரை பார்த்ததில்லை. இராமேஸ்வரம் கொடுத்த இரத்தினத்தை இழந்து விட்டோம். அவருக்கு இந்த தமிழக மக்கள் பலவிதமான முறையில் அஞ்சலி செலுத்தினார்கள்.


எனவே யாருமே கலாம் ஐயாவுக்கு செய்யாத அஞ்சலியாக எனது உயிரை நானே மாய்த்துக் கொண்டு இந்த உயிர் அஞ்சலியை செலுத்துகிறேன். நிச்சயம் எனது அஞ்சலியை அவர் ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கையுடன் செல்கிறேன் இராமேஸ்வரம் மண்ணுக்கு. கலாம் ஐயா புதைக்கப்படவில்லை அதற்கு மாறாக விதைக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய ஒவ்வொருவர் உள்ளத்திலும், இல்லத்திலும் நிலைத்து இருப்பார்.

எனது உடலை நான் பிறந்த மண்ணுக்கும்! எனது நீங்கா நினைவுகளை எனது நண்பர்களுக்கும்! கலாம் ஐயாவின் கனவை நிறைவேற்ற இந்நாட்டிலுள்ள குழந்தைகள், மாணவச் செல்வங்கள் மற்றும் இனிய விவேகமான இளைஞர்கள் பாடுபட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் எழுதப்பட்டுள்ளது.

அப்துல்கலாம் மறைவை தாங்க முடியாத சோகத்தில் வாலிபர் தற்கொலை செய்த சம்பவம் திருப்போரூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (3-7)

# கலாமின்சமாதியில்தினமும் திருக்குர்ஆன் ஓத ஏற்பாடு

**கலாமின் சகோதரரின் கோரிக்கைக்கு பிரதமர் உறுதி**



மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் இறுதிச் சடங்கின் போது அப்துல் கலாம் உடலுக்கு பிரதமர் மோடி இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அங்கு அமர்ந்திருந்த அப்துல் கலாமின் அண்ணன் முகமது முத்து மீரா லெப்பை மரைக்காயரை சந்தித்து அவருக்கு ஆறுதல் கூறினார்.

அவரது கால்களை தொட்டு வணங்கி வணக்கம் செலுத்திய மோடி சிறிது நேரம் அப்துல் கலாம் அண்ணனிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது முகமது முத்து மீரா மரைக்காயர், 'எனது சகோதரர் அப்துல் கலாம் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் தினந்தோறும் சில நிமிடங்கள் திருக்குர்ஆன் ஓத ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதற்கு மோடி, 'ஆவன செய்யப்படும்' என்று உறுதி அளித்தார். அப்துல் கலாமின் அண்ணனின் வேண்டுகோளை, சாஸ்தா பல்கலைக்கழக துணை வேந்தர் சேதுராமன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சொன்னார். பின்னர் பிரதமர் அளித்த உறுதி மொழியை முகமது மீரா மரைக்காயரிடம் தெரிவித்தார். (3-7)

# விண்டோஸ் -10 பதிப்புக்கு வந்தது அமோக வரவேற்பு

மைக்ரோசொப்ட்டின் விண்டோஸ்-10 பதிப்பு வெளியான இருபத்திநான்கு மணி நேரத்தில் சுமார் ஒன்றரை கோடி பேர் தமது கம்ப்யூட்டர்களை இலவசமாக தரம் உயர்த்திக் கொண்டுள்ளனர்.

கம்ப்யூட்டர் உலகின் புதிய வரவான மைக்ரோசொப்டின் விண்டோஸ்-10 பதிப்பு நேற்று கடந்த புதன்கிழமை வெளியானது. பல்வேறு அதிவேக, நவீன அம்சங்களை கொண்ட இந்த பதிப்பை ஏற்கனவே விண்டோஸ் நிறுவனத்தின் அதிகாரபூர்வ அனுமதியுடன் விண்டோஸ்-7, விண்டோஸ்-8, விண்டோஸ்-8.1 மொடல் கம்ப்யூட்டர்கள் மற்றும் விண்டோஸ் 8.1 ஸ்மார்ட் போன்களை வைத்திருப்பவர்கள் விண்டோஸ்-10 பதிப்பில் உள்ள அனைத்து நவீன தொழில்நுட்ப வசதிகளையும் இலவசமாக தரம் உயர்த்திக் கொள்ளலாம் என



மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித் திருந்தது.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இந்த அறிவிப்பை அடுத்து விண்டோஸ்-10 பதிப்பை விண்டோஸ்-7, 8 மென்பொருட்களைக் கொண்ட கம்ப்யூட்டர்களை பயன்படுத்துபவர்கள் மற்றும் விண்டோஸ்-8.1 பதிப்பை ஸ்மார்ட் போன்களில் பயன்படுத்துபவர்கள் உட்பட வெளியான இருபத்து நான்கு மணி நேரத் துக்குள் சுமார் ஒன்றரை கோடி பேர் பதிவிறக்கம் செய்து உபயோகிக்கத் தொடங்கியுள்ளதாக மைக்ரோசொப்ட் தெரிவித்துள்ளது.

விண்டோஸ்-7 பதிப்புக்கு பிறகு வெளியான விண்டோஸ்-8 பெரிய அளவில் மக்களிடையே வரவேற்பை பெறவில்லை. இதையடுத்து, விண்டோஸ்-9 வெளியாகவில்லை. சுமார் மூன்றாண்டுகள் இடைவெளிக்கு பிறகு வெளியான விண்டோஸ்-10 பதிப்பு பல்வேறு வகையான நவீன அம்சங்களுடன் வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச நிறுவனங்களில் 4500 சட்டவிரோத தேர்தல் விளம்பரங்கள் - கபே அமைப்பு

(கொழும்பு)


அரச நிறுவனங்களால் நாடு முழுவதும் சட்டவிரோதமாக 4 ஆயிரத்து 500 தேர்தல் பிரசார பனர்கள் பொருத்தப்பட்டுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

காட்சிக்கு வைக்கப்பட்ட பல பனர்கள் அரச நிறுவனங்களினால் பராமரிக்கப்பட்டு வருவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் படங்கள்அச்சிடப்பட்ட பனர்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நாட்டில் உள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளில் இந்த தேர்தல் பிரசார பனர்கள் வைக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்களின் படங்களுடன் கூடிய நிரந்தர மற்றும் தற்காலிக பனர்கள் வைக்கப்பட்டுள்ளமையானது தேர்தல் சட்டங்களுக்கு முரணானது எனவும் கீர்த்தி தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




# ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களை பகிர்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)



**தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி அதிகாரம் கோரினாலும் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வு வழங்குவதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

அன்று மலைநாட்டு சிங்களவர்கள் சமஷ்டி கோரிய போது தமிழ் மக்கள் அதை எதிர்த்ததாக குறிப்பிட்ட அவர் இன்று தமிழ் மக்கள் சமஷ்டி கோருகையில் சிங்கள மக்கள் எதிர்ப்பதாகவும் கூறினார்.

தமிழ் கட்சிகள் 1950களில் சமஷ்டி அதிகாரம் கோரியதாகவும் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்கவே முதலில் சமஷ்டி பற்றி பேசியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் த.தே.கூவின் விஞ்ஞாபனம் குறித்து வினவியதற்கு பதிலளித்த அவர்,

ஐக்கிய இலங்கைக்குள்ளே அதிகாரத்தை பகிர்வதாக எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம்.

எமது நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை விட மாற்றமானது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி அதிகாரம் கோரியுள்ளது. எவரும் குறைவாக அதிகாரம் கோருவதில்லை. அதிக அதிகாரம் கோரினாலே தாம் எதிர்பார்ப்பது கிடைக்கும் அவர்களுக்கு எதுவும் கோர முடியும்.

தமிழ் கட்சிகள் 1950 கள் முதல் சமஷ்டி அதிகாரமே கோரி வந்தன. சமஷ்டி கட்சியொன்றையே அன்று தமிழ் கட்சிகள் அடையாளப்படுத்தி இலங்கையின் சமஷ்டி அதிகாரம் குறித்து எஸ். டபிள்யு. பண்டார நாயக்கவே முதலில் பேசினார். எமது நாட்டை முன்னேற்றுவதற்கு சமஷ்டி முறை சிறந்தது என அவர் தெரிவித்தார்.

டொனமூர் அரசியலமைப்பு காலம் முதல் சமஷ்டி கோரிக்கை முன்வைக்கப்பட்டது. சமஷ்டிக்கு பயமில்லாததால் அன்று மலை நாட்டு சிங்கள பௌத்தர்கள் சமஷ்டி கோரினர். ஆனால் தமிழ் மக்கள் அதனை எதிர்த்தார்கள்.

ஐக்கிய இலங்கைக்குள் வாழ வேண்டுமென்றே அவர்கள் கோரினர். தற்பொழுது தமிழ் மக்கள் சமஷ்டி அதிகாரம் கோருகையில் சிங்கள மக்கள் எதிர்க்கின்றனர் என்றார்.

ஐ.ம.சு.மு. ஆட்சியில் 13 பிளஸ் குறித்து பேசப்பட்டாலும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 13 பகிர்வு என குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து வினவப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் 13 பிளஸ் (+) அல்லது மைனஸ் (-) குறித்து எதுவும் தெரியாமலே அன்று மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் குறித்து பேசினார்.

13 பிளஸ் பேசியவர் இன்று 13ஆவது திருத்தத்தை விட அதிகாரத்தை குறைக்க தயாராகிறார். அன்று 13 பிளஸ் குறித்து பேசினாலும் 13ஐ விட குறைந்த அதிகாரம் வழங்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

அதனாலே 13 மைனஸ் வழங்கும் அரசில் இருக்கமாட்டேன் என பகிரங்கமாக கூறினேன்.


அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண தெரிவுக்குழு அமைத்து 2 வாரத்தில் அறிக்கை கோரியிருந்த மகிந்த ராஜபக்ஷ அந்த அறிக்கையை தாமதப்படுத்துமாறு தெரிவுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு கூறியிருந்ததாகவும் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படங்களை அகற்றுமாறு தேர்தல் திணைக்களம் பணிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படங்களை அகற்றுமாறு தேர்தல் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படங்கள் அடங்கிய பெயர்ப்பலகைகள், பதாகைகள் உள்ளிட்டன



காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான பதாகைகளை தற்காலிக அடிப்படையில் அகற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி தேர்தல் ஆணையாளர் பிமல் இந்திரஜித் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார். மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த உத்தரவினை எந்தவொரு உள்ளூராட்சி மன்றமும் இதுவரையில் அமுல்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாட்டில் நல்லாட்சியை காக்க தேர்தல் மேடையில் சந்திரிகா



(கொழும்பு)

லண்டனில் இருந்து இலங்கை திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பொதுத்தேர்தல் ஊடாக நாட்டில் நல்லாட்சியை உருவாக்குவதற்காக மாதுளுவாவே சோபிததேரர் தலைமையிலான பிரஜைகள் அமைப்பு மற்றும் தொழிற்சங்க ஒன்றியம் ஆகியவற்றுடன் இணைந்து மேடையில் ஏறவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

ஜனவரி 8 வானவில் புரட்சியில் சந்திரிகாவே மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக கொண்டுவந்தார். அத்துடன் மைத்திரிபால சிறிசேன மீதான நம்பிக்கை தொடர்பில் நற்சான்றிதழை சந்திரிகாவே எதிர்க்கட்சியினருக்கும் பொது அமைப்புகளுக்கும் வழங்கியிருந்தார். அத்துடன் நல்லாட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக எதிர்க்கட்சியுடன் ஐக்கியமான கூட்டணியை ஏற்படுத்த சந்திரிகாவே பாரியபங்கை முன்னெடுத்தார். இதனால், ஜனவரி 8 ஆம் திகதி பெற்ற வெற்றியை பாதுகாக்க உதவுமாறு சுயாதீன சிவில் அமைப்புகளும் அவரது ஆதரவாளர்களும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதற்கு சந்திரிகாவும் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அறிய கிடைத்துள்ளது. இதனடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இன்னும் சில தினங்களில் மாதுளுவாவே சோபித தேரர் மற்றும் தொழிற்சங்க ஒன்றியத்துடன் இணைந்து தேர்தல் மேடையில் ஏறுவார் என கூறப்படுகிறது. (இ-7)

## மகிந்த தரப்பு பசுந்தோல் போர்த்திய புலி

### அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது பசுந்தோல் போர்த்திக் கொண்ட புலி எனவும் நாட்டின் மனிதர்களுக்கு இடையிலான உறவுகளை துண்டிக்கும் முயற்சியில், அந்த முன்னணியின் குருநாகல் மாவட்ட வேடபாளர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள், நற்குணம், மனித உறவுகள் என அனைத்தையும் வீழ்த்தி அதிகாரத்திற்காக எந்த கெடுதியான காரியத்தையும் செய்ய மகிந்த ராஜபக்ஷ உட்பட திருட்டுக் கூட்டம் தயாராக இருக்கின்றது. நல்லாட்சி என்பது அவர்களுக்கு ஏற்ற விடயம் அல்ல. இதனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது பசுவின் தோலை போர்த்திய புலி என்பது தெளிவாகியுள்ளது எனவும் கரு ஜயசூரிய தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒய்வூதியர்களின் கோவைகளில் ஆவணங்கள் இன்மையால் மீளாய்வு செய்வதில் தாமதம்

(கிளிநொச்சி)

ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு மீளாய்வு செய்வதற்கான வேலைத்திட்டம் தற்போது பிரதேச செயலகங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மீளாய்வு நடவடிக்கைக்காக ஓய்வூதிய திணைக்களத்தில் இருந்து ஓய்வூதியக் கொடுப்பனவு பெறுபவர்களின் கோவைகள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட பெரும்பாலான ஓய்வூதியர்களின் கோவைகளில் உரிய ஆவணங்கள் காணப்படாதுள்ளது.

இதனால் ஓய்வூதியம் பெறுபவர்கள், தாங்கள் ஓய்வூதியம் பெற்ற போது வழங் கப்பட்ட ஓய்வூதியக் கடிதம், இறுதியாகப் பெற்ற சம்பளம் ஆகியவற்றை உறுதிப்படுத்தி தருமாறு பிரதேச செயலகங்களினால் கோரப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்த் சூழ்நிலை காரணமாக திணைக்களங்களில் இருந்த கோவைகளும் அழிவடைந்து விட்டன.

யுத்த சூழ்நிலையில் அனைத்தையும் இழந்த நிலையில் ஓய்வூதியம் பெறுவோரிடமும் குறிப்பிட்ட ஆவணங்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் ஓய்வூதியம் பெறுவோர் சிரமத்திற்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான மீளாய்வு நடவடிக்கை நடைபெறாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக ஓய்வூதியர்களினால் கவலை தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர் கடமை புரிந்த காலத்தில் பொது நிர்வாக அமைச்சில் இவர்களுக்குரிய கோவைகள் இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

பொது நிர்வாக அமைச்சின் பதவி ரீதியிலான தனித்தனி பிரிவுகள் இயங்குவதால் அங்கிருந்து ஓய்வூதியம் பெறுவோரின் கோவைகளில் இருந்து உரிய ஆவணங்களைப் பெற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் ஓய்வூதியர்க ளினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே உரிய அரசாங்க அதிபர்கள், ஓய்வூதிய நலன்புரி சங்கத்தினர் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து அனைத்து ஓய்வூதியர்களுக்கும் நன்மை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப் பட்ட ஓய்வூதியர்களினால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-254)




## தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(மல்லாவி)

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியினருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலகத் தகவல் தெரிவிக்கின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் மேற்படி மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களின் கீழ் இயங்குகின்ற பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியினருக்கு கற்றல் உபகரணங்கள் காலணி (சப்பாத்து) என்பன வழங்குவதற்கு வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதற்கமைய துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக 35 காலணிகள் (சப்பாத்து) ஆயிரத்து 200 அப்பியாசக்கொப்பிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இவை மாணவர்களுக்கு வழங்கப்பட்டதும் அதற்கான விபரப்பட்டியலினை வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் உயிரிழை அமைப்பினர் ஊடாக முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த மருத்துவ பொருட்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள படுக்கைப் புண்ணினால் பாதிப்புற்றுள்ள 31 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

# கலை இலக்கிய போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கலை இலக்கிய போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் வெற் றியீ ட்டி முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ள மாணவர்களின் பெயர் விபரங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**பாலர் பிரிவு**

**கையெழுத்துப்போட்டி**

**மேற்பிரிவு**

அ.முல்லைச்செல்வி(மு/மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்), பெ.டனுசிகா (மு/சிறீ சுப்பிரமணிய வித்தியாசாலை), பி.சங் கவி (மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர் தர வித்தியாலயம்).

**கீழ்ப்பிரிவு**

பொ.தமிழினி(மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்),கி.பியூசி(மு/மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்) ம.அக்சயா (மு/மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்).

**கவிதைப்பாடற் போட்டி**

**பாலர் பிரிவு**

ரா.நிதர்சனா(மு/வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம்), நா.மிதுஷன்(மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர் தர பாடசாலை), அ.கனிப்பிரியன்(மு/வள்ளிபுனம் கனி ஷ்ட உயர்தர பாடசாலை).

**கனிஷ்ட பிரிவு**

ச.நிஷர்(மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்),நி.குயின்தாஸ்(மு/இரணைப்பாலை றோ.க. வித்தியாலயம்), பி.பிரவினா (மு/புதுக் குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்).

**சிரேஷ்டபிரிவு**

யே.றியாணா(மு/ஆனந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), கே.பிறையாசி (மு/உடையார்கட்டுமகாவித்தியாலயம்), இசுமன் (மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்).

**கவிதை நயத்தல் போட்டி**

**சிரேஷ்டபிரிவு**

ச.அகனிலா(மு/பாரதி வித்தியாலயம்), அ.அனுசியா(மு/பாரதி வித்தியாலயம்).

**கவிதைப்போட்டி**

**கனிஷ்டபிரிவு**

ர.ரதுசாயினி(மு/மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்), இ.யாழினி (மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்), வி.அபிவர்ணா(மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்).

**கட்டுரைப்போட்டி**

**கனிஷ்டபிரிவு**

சி.மேனுஜா(மு/ஆனந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), த.தமிழ்பிரியா(மு/மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்), வி.அபிவர்ணா(மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்).

**கவிதைப்போட்டி**

**சிரேஷ்டபிரிவு**

ர.பவித்திரா(மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்),சி.அகலிசை(மு/சுதந்திரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாட சாலை), இ.கீர்த்தனா(மு/பாரதி வித்தியாலயம்).

**கட்டுரைப்போட்டி**

**சிரேஷ்டபிரிவு**

தி.தீர்ச்சனா(மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்),நி.யாழிசை(மு/பாரதி வித்தியாலயம்),கே. சாலினி (மு/உடையார்கட்டு மகா வித்தியா லயம்).

**திறந்தபிரிவு**

**கவிதையாக்கப்போட்டி**

நடராஜா இராமநாதன் (ஆலடி, உடையார் கட்டு வடக்கு,உடையார் கட்டு),திருமதி அன்னலிங்கம் கமலாசினி (வள்ளுவர்புரம், விசுவமடு), ஜெயம் ஜெகன் (9ஆம் வட்டாரம், மல்லிகைத்தீவு).

**சிறுகதைப்போட்டி**

திருமதி விமலாசினி கஜேந்திரன் (வள்ளுவர்புரம், றெட்பானா, விசுவமடு), நட ராஜா இராமநாதன் (ஆலடி,உடையார்கட்டு வடக்கு,உடையார்கட்டு),பூதத்தம்பி கஜேந்திரன் (வள்ளுவர்புரம், விசுவமடு).

**பாடலாக்கப்போட்டி**

நடராஜா இராமநாதன் (ஆலடி, உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு),ஜெயம் ஜெகன் (9 ஆம் வட்டாரம்,மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு),பூதத்தம்பி கஜேந்திரன் (வள்ளுவர்புரம், விசுவமடு).

**சிறுவர் கதைப்போட்டி**

திருமதி விமலாசினி கஜேந்திரன் (வள்ளுவர்புரம், றெட்பானா, விசுவமடு),பூதத்தம்பி கஜேந்திரன் (வள்ளுவர்புரம், விசுவமடு), ஜெயம் ஜெகன்(9ஆம் வட்டாரம், மல்லிகைத்தீவு,புதுக்குடியிருப்பு).

**இலக்கிய விவரணப்போட்டி**

ஜெயம் ஜெகன்(9ஆம் வட்டாரம், மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு),நடராஜா இராமநாதன் (ஆலடி,உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு).

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

ஜெயம் ஜெகன்(9ஆம் வட்டாரம், மல்லிகைத்தீவு,புதுக்குடியிருப்பு),திருமதி விமலாசினி கஜேந்திரன் (வள்ளுவர்புரம், றெட்பானா, விசுவமடு),பூதத்தம்பி கஜேந்திரன் (வள்ளுவர்புரம்,விசுவமடு). (2)



யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியம் கிளிநொச்சி வைத்தியசாலையுடன் இணைந்து ஒழுங்கு செய்த இரத்ததான நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள விவசாய பீட வளாகத்தில் நடைபெற்ற போது...

## வெற்றியீட்டியோருக்கான விருதுகள் வழங்கப்படவில்லை

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான விருதுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற விருது போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டியோருக்கு இதுவரை விருதுகள், சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட இளைஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இளைஞர்களின் கலைத்திறன்களை முன்னேற்றும் முகமாக இளைஞர் விருது போட்டியும் பங்குபற்றி வெற்றியீட்டுபவர்களுக்கான சான்றிதழ், விருதுகள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் வருடாவருடம் நடைபெற்று வருகின்றது.

விருதுப்போட்டியில் அறிவிப்பாளர், இளம்பாடகர், புத்தாக்க நடனம், நடனம், நாடகம்,பேச்சு என பல்வேறுபட்ட கலைத்துறைப் போட்டிகளும் இடம்பெறமை குறிப்பிடத்தக்கது. எனவே உரிய அதிகாரிகள் 2014 ஆம் ஆண்டுக்கான விருதுகளை பெற்றுத் தந்த பின்னர் இவ்வருடத்திற்கான போட்டியினை நடத்துமாறும் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய வித்தியானந்தா மாணவர்கள் கௌரவிப்பு



வடமாகாண மட்ட பாடசாலை களுக்கிடையேயான விளையாட் டுப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டி தேசிய மட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள 15 வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு முள்ளி யவளை வித்தியானந்தாக்கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக் கிழமை கல்லூரியின் அதிபர் க.சிவ லிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு கல்வி வலய' உடற்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் மைக்கல் திலகராஜா, முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப் பாளர் காண்டீபன், வித்தியா தீபம் சுவிஸ் கிளையின் நிர்வாக உறுப் பினர் கு.சித்திரவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டதுடன் பாடசாலை அபி விருத்திச் சங்க செயலாளர், பழைய மாணவர் சங்க செயலாளர், பெற் றோர், பழைய மாணவர்கள், ஆசிரி யர்கள், மாணவர்கள் என ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்கள் சூட்டியதுடன் சான்றி தழ்களும்வழங்கிக்கௌரவிக்கப்பட்டது.

சிறப்புப் பரிசாக 15 வீரர்களுக்கும் கல்லூரியின் பழைய மாணவனா கிய சுவிஸ் நாட்டில் வசிக்கும் குமா ரையா சித்திரவேல் என்பவரால் அவ ரது மறைந்த பெற்றோர்கள் ஞாப கார்த்த மாக விளையாட்டு உடைகள் வழங்கப்பட்டன. (க-302)

## ஜே.பி.எல். போட்டிகள் ஆரம்பம்



ஜே.பி.எல். என அழைக்கப் படும் யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் இருபதுக்கு-20 கிரிக்கெட் போட்டி கள் நேற்று ஆரம்பமாகியது.

வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் இந்தச் சுற்றுப்போட்டி இம் முறை 3 வருடமாக லைக்கா மொபைல் அனுசரணையில் நடத்தப்படுகின்றது.

இம்முறை சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றுவதுடன், அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

கிறாஸ்கோப்பர்ஸ், சென்ற லைட்ஸ், ஜொனியன்ஸ், கொக்கு வில் மத்திய சனசமூக நிலைய அணி, திருநெல்வேலி கிரிக்கெட் அணி, ஹாட்லி ஆகியன ஒரு பிரிவாகவும், ஸ்கந்தா ஸ்ரார்ஸ், சென்ரல், யூனியன்ஸ், பற்றீ சியன்ஸ், ஸ்ரீகாமாட்சி, விங்ஸ் ஆகிய அணிகள் ஒரு பிரிவாக போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

மொத்தமாக 38 போட்டிகள் நடைபெறவுள்ள இந்த சுற்றுப் போட்டியில், ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிப் போட்டிகளில் விளையாடும்.

ஜே.பி.எல். போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (க)

## கழுகுகள் உதைபந்தாட்ட தொடர் இன்று கோலாகலமாக ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடனும் நெற் கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி மற்றும் தொடக்க நிகழ்வு இன்று சனிக்கிழமை ஆரம்பமாக வுள்ளது.

கழுகுகள் விளையாட்டுக்கழகத் தலைவர் க.சதீஸ் தலைமையில் நடைபெறவுள்ள போட்டிக்கு பிரதம விருந்தினராக ஏ.நடராஜா (இந்தி யத் துணைத் தூதுவர்), H.M.G.S பள்ளியக்கார (ஆளுநர் - வடமா காணம்), நந்தன உடவத்த (யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி), அனுரா டி செல்வா (இலங்கை உதைபந்தாட்ட சம் மேளனத் தலைவர்), மா.நவநீதமணி (தலை வர், பருத்தித்துறை உதைபந் தாட்ட சங்கம்), ரி.ராஜசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

முதலாவது சுற்றுப்போட்டியாக கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப் பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக்கம் மோதவுள்ளது.

இவ் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் யாவும் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மை தானத்தில் நடைபெறவுள்ளது. (க)

## வட்டு மத்திய கல்லூரி மாணவி கல்லூரி, ஊர்மக்களால் பாராட்டு

வட்டு மத்திய கல்லூரி மாணவி செல்வி.ம.கமலினி மாகாணமட் டத்தில் நடந்த மெய்வல்லுநர் போட்டியில் 100மீற்றர், 200மீற்றர் நீளம்பாய்தல் ஆகிய போட்டிகளில் பங்கு பற்றி தங்கப் பதக்கம் வென் றுள்ளதுடன் நீளம்பாய்தல் போட்டி யில் புதிய சாதனை ஒன்றையும் பதிவு செய்துள்ளார்.

இம் மாணவியின் சாதனையை பாராட்டி கல்லூரி சமூகத்தினாலும் ஊர்மக்களினாலும் பழைய மாண வர்களாலும் வட்டு இந்து வாலிபர் சங்கத்தினாலும் இம் மாணவியின் சாதனையை கௌரவிக்கும் முக மாக கடந்த புதன்கிழமை பங்குறு வைரவர் ஆலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டு பாடசாலை விழா மண்டபத்தில் வைத்து கௌர விப்பு இடம் பெற்றது.

அத்துடன் இம் மாணவியினால் இது வரை காலமும் வெற்றிபேற்ற பதக்கங்களும் சான்றிதழ்களும் விழா மேடையில் பார்வைக்கு வைக்கப்பட்டது.



இம் மாணவிக்கு பரிசில்கள் மற்றும் பணப்பரிசில்களும் வழங் கப்பட்டன. (க)

## கனகபுர மாணவன் மாகாண மட்டத்தில் சாதனை

வடக்கு மாகாண பாட சாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி யானது வவுனியா கல்வி யியற்கல்லூரியில் அண் மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் கிளி/ கனகபுரம் மகா வித்தியால யத்தை சேர்ந்த ஜெய மோகன் நிலக்ஷன் 15 வயதுப்பிரிவில் 100 மீற்றர் தடை தாண்டலில் 17.06 செக்கன்களில் ஓடி வெள் ளிப் பதக்கத்தையும் நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் 5.30 மீற்றர் தூரம் தாண்டி வெண்கலப் பதக்கத்தை யும் பெற்று பாடசாலை யின் வரலாற்று சாத னையை படைத்துள் ளார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்கள் முட்டாள்களின் நாட்டில் பட்டினியாய் இருப்பதில்லை.
– சர்ச்சில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அஞ்சல் வாக்களிப்பில் அசமந்தம் வேண்டாம்!

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்17ஆந் திகதி நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு ஓகஸ்ட் 3ஆந் திகதியில் ஆரம்பமாகின்றது.

தேர்தல் பணிகளில் அரச உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டியிருப்பதால், அவர்கள் முன்கூட்டியே வாக்களிப்பதற்கான ஒரு ஏற்பாடாக அஞ்சல்மூல வாக்களிப்பு இடம்பெறுகின்றது.

அஞ்சல் வாக்களிப்புக்கான தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாடுகள் நிறையவே உண்டு.

அஞ்சல் வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை அரச உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைத்தல், அஞ்சல் வாக்களிப்புக்குத் தகைமை பெற்றுள்ளதைத் தெரியப்படுத்துதல் என்றவாறான ஏற்பாடுகள் தேர்தல் திணைக்களத்தின் வேலைப்பளுவுக்கு மேலதிகமானதாகும்.

எனினும் அஞ்சல் வாக்களிப்பின்போதும் செல்லுபடியற்ற வாக்குகள் தாராளமாக இருப்பது வேதனைக்குரிய விடயம். அரச உத்தியோகத்தர்கள் அளிக்கின்ற வாக்குகளே செல்லுபடியற்றது எனும்போது, அரச பணியாளர்களுக்கே வாக்களிப்பது பற்றிய போதிய அறிவு இல்லை என்பது தெரிகிறது.

அதேசமயம் அரச உத்தியோகத்தர்களில் நான்கில் ஒரு பகுதியினர் வேண்டாவெறுப்புடன் வாக்களிக்கின்றனர் என்ற உண்மையையும் உணரமுடிகின்றது.

அரச உத்தியோகத்தர்களின் வாக்களிப்பு நூறு வீதமாக இருக்க வேண்டுமென்பதுடன் வாக்களிப்பில் செல்லுபடியாகும் வாக்குகளின் வீதமும் நூறாக இருப்பது கட்டாயமானதாகும்.

அரச பணியாளர்கள் அளிக்கும் வாக்குகளில் கணிசமான வாக்குகள் செல்லுபடியற்றது என்ற விடயம் இலங்கையில் உள்ள வாக்களிப்பு நடைமுறைகளும், தேர்தல் அமைப்புகளும் அரசியல்வாதிகளுக்கானதும், அரசியல்வாதிகளை மையமாகக் கொண்டதுமாகும் என்ற உண்மையையும் உணரவேண்டியுள்ளது.

ஜனநாயக நாட்டில் ஆட்சியமைப்பு என்பது தேர்தல் மூலமாகவே நடைபெறுகிறது.

எனவே தேர்தல் விதிகளையும் வாக்களிப்பு நடைமுறைகளையும் மக்கள் தெரிந்திருக்க வேண்டும் என்பதுடன் மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும்.

அஞ்சல்மூல வாக்களிப்பில் செல்லுபடியற்ற வாக்குகள் கணிசமாக இருக்குமாயின், பொதுத் தேர்தலின்போதான வாக்களிப்பில் செல்லுபடியற்ற வாக்குகளும் மிக உயர்வாக இருக்கும்.

சிலவேளையில் அஞ்சல் மூல வாக்களிப்பின் போதான செல்லுபடியற்ற வாக்குகளின் வீதாசாரத்தைவிட, பொதுத் தேர்தலின் போதான வாக்களிப்பில் செல்லுபடியற்ற வாக்குகளின் வீதாசாரம் குறைவாக இருக்குமாயின் அரச உத்தியோகத்தர் தெரிவில் எங்கோ தவறுகள் நடந்துள்ளன என்று அனுமானிக்க முடியும்.

ஆக, அஞ்சல்மூல வாக்களிப்பு நூறு வீதமும் செல்லுபடியான வாக்குகளைத் தர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதை நிறைவேற்றுவது தொடர்பில் ஒவ்வொரு அரச திணைக்களங்களும் தத்தம் உத்தியோகத்தர்களுக்கு வாக்களித்தல் தொடர்பான விழிப்புணர்வை வழங்கினால் மிகவும் நல்லது.

# ஓடி விளையாடு பாப்பா

**சின்மய பாலவிஹார் முகாம் பிள்ளைகள் நிரப்பப்பட வேண்டிய பாத்திரங்கள் அல்ல. ஒளியேற்றப்பட வேண்டிய விளக்குகள்**
**– சுவாமி சின்மயானந்தர்–**

எமது பாடசாலைகள் மற்றும் தனியார் கல்விநிறுவனங்கள் அனைத்தும் பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயாராக்கும் பணியைச் செய்து வருகின்றன. அது மட்டும் எதிர்காலத்தை நிர்ணயித்து விடாது.

குழந்தைகள், அன்பு, பாசம், அரவணைப்பு எனும் நெய்விட்டு விழுமியங்கள் என்னும் திரிபோட்டு, அறிவு ஞானம் எனும் சுடர் ஏற்றி தாமே பிரகாசிக்கச் செய்யப்பட வேண்டியவர்கள்.

எமது குழந்தைகளே எமது எதிர்காலம் எனும் பூரண நம்பிக்கையுடன் அவர்களிடையே உயர்ந்த விழுமியங்களைப் பேணும் தன்மை, சிறந்த தலைமைத்துவப் பண்பு, தூரநோக்கு, உடல் உள சமநிலையைப் பேணும் பண்பு ஆகியவற்றை வளர்க்க வேண்டும் எனும் நோக்கில், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களால் பல தசாப்தங்களுக்கு முன் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற அமைப்பே சின்மய பால விஹார் ஆகும்.

5 வயது முதல் 15 வயது வரையான பிள்ளைகளுக்கான இவ்வகுப்புக்கள் குருதேவரால் ஆரம்பிக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் 30இற்கும் மேற்பட்ட நாடுகளில் 400இற்கும் மேற்பட்ட ஆச்சார்யர்களால் நிர்வகிக்கப்பட்டுவரும் சின்மயாமிஷன் ஆச்சிரமங்களிலும் அவ் ஆச்சார்யர்களின் வழிநடத்தலில் சில ஆயிரக்கணக்கான நிலையங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

குருதேவர் மானிட சமூகத்திற்கு அளித்த கருணை வெளிப்பாடுகளின் ஓர் அம்சமே சின்மய பாலவிஹார்.

சின்னஞ்சிறுசுகளின் பிஞ்சு உள்ளங்களில் ஆன்மீக விழுமியங்களின் வித்துக்கள் விதைக்கப்பட்டு அவற்றின் மலர்ச்சிக்குத் தேவையான சூழல், உகந்த கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் உருவாக்கப்படல் வேண்டும்.

அவை அன்பு, பாசம்மிக்க பரிவுடன் கவனித்துப் பேணப்படவேண்டும். அவ்வாறு வளர்க்கப்பட்ட குழந்தை உலகளாவிய அன்பு, சகோதரத்துவம், சாந்தி, பேரின்பம், வனப்பு, பூரணத்துவம் எனும் மலர்களை மலர்விக்கும் விருட்சமாக மாறும் என்பதே குருதேவரின் ஆழ்ந்த நம்பிக்கை.

அத்துடன் பூக்கள் மலர்வதற்கு சூரிய ஒளி எவ்வளவு அவசியமோ அவ்வாறே மனித உள்ளம் மலர்வதற்கு அன்பு அவசியம் என்றும் கூறியுள்ளார்.

இத்தகைய கருத்துக்களை அடிப்படையாக வைத்தே சின்மய பாலவிஹார் வகுப்புச் சிறார்களுக்கான பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றின் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வகுப்புக்கள் (இறைவணக்கம்) சமஸ்கிருத ஸ்தோத்திர பாராயணங்களுடன் ஆரம்பித்து பக்திக் கதைகள், உரையாடல் விழுமியங்களை வளர்க்கும் விளையாட்டுக்கள், குழுச் செயற்பாடுகள், காணொலிகள், போட்டிகள் போன்றவற்றுடன் இறுதியாக ஆரத்தி, வாக்குறுதி என்பவற்றுடன் நிறைவடைகின்றன.

இவ்வாறு உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்டுவரும் வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலும் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய அவர்கள் 2011ஆம் ஆண்டு தை மாதத்தில் பணியாற்ற ஆரம்பித்ததைத் தொடர்ந்து 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைபெற்று வருகின்றது.

ஆரம்ப நாட்களில் ஆச்சாரியரால் நடத்தப்பட்டுவந்த இவ்வகுப்புக்கள் தற்போது பல பாலவிஹார் சேவகர்களுடன் சேர்த்து நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழ்நிலையில் குழந்தைகளின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அவர்கள்மீது அக்கறை செலுத்த, அன்பு காட்ட, அவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க பெற்றோருக்கு நேரமில்லை.

உடற்பசிக்கு உணவையளித்து உளப்பசிக்கு தொலைக்காட்சியைப் பார்க்கும்படி பணிக்கப்படுகின்றார்கள்.

சில குடும்பங்களில் தமது மன உளைச்சல்களை குழந்தைகளில் கொட்டித்தீர்த்து ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தைகளைப் பரிதவிக்க வைக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலைகள் குழந்தைகளை பல்வேறு தீய செயல்களில் ஈடுபடும் நிலைக்கு உள்ளாக்குகின்றது.

சகல வசதிகள் நிறைந்த குடும்பங்களிலும்கூட பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய ஆசைகளைத் திணித்து அவர்களால் அவற்றைப் பூரணமாகச் செயற்படுத்த முடியாத நிலையில் அவர்களைத் திட்டித்தீர்த்து தம் குழந்தைகளைத் தாமே மனப்பிறழ்வுகளுக்கு ஆளாக்குகின்றனர்.

இவற்றைவிடுத்து குழந்தைகளிடம் அவர்களின் வயதுக்கேற்ற வகையில் அன்புடன் அணுகி சந்தோசமாக விளையாட்டுக்களுடன் விழுமியங்களை மற்றும் இறைவனைப் பற்றிய சிந்தனைகளை அவர்களாக உள்வாங்கச் செய்யும் முயற்சியே இப் பால விஹார் வகுப்புக்களின் நோக்கமாகும்.

இல.9, செட்டித்தெரு ஒழுங்கையில் அமைந்துள் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் இதுவரை காலமும் வாரத்தில் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் இவ் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வந்தன.

தற்போது ரியூசன் வகுப்புக்களுக்குச் செல்வதால் பாலவிஹார் வகுப்புக்கு வரமுடியாமல் இருக்கும் பிள்ளைகளின் நலன்கருதி வாரத்தில் இரு நாட்கள் அதாவது வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் 5.30 வரையும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணிவரையும் இவ் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் இவ்வகுப்புக்களுக்கு பிள்ளைகளை உள்வாங்கி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற விருப்புடன் வருடந்தோறும் சின்மய பாலவிஹார் முகாம்கள் நடத்தப்பட்டுவருகின் றன.

இதில் இம்முறை ஓடி விளையாடு பாப்பா எனும் பொருளில் தரம் 6,7,8 ஆம் தரங்களில் கல்வி பயிலும் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கோப்பாயில் அமைந்துள்ள யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை 3 நாட்கள் வதிவிடப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

மேலும் 5 வயதிற்கு மேற்பட்ட 5ஆம் ஆண்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான வதிவிடமற்ற பயிற்சி முகாம் எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் சின்மயாமிஷன் ஆச்சிரமத்தில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது. இதில் குழந்தைகள் கலந்து பயன் பெறலாம்.

இம்முயற்சிக்கு வட மாகாணக் கல்வித் திணைக்களமும் குறிப்பாக யாழ். கல்வி வலயமும் பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளன.

அத்துடன் இம்முறை முதன்முதலாக இவ்வதிவிட முகாம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் நடத்துவதற்கு மத்திய அரசின் கல்வித் திணைக்களமும் அனுமதி வழங்கி தமது ஒத்துழைப்பை வழங்கியமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

மேலும் பல வளவாளர்கள் இதில் பங்குகொண்டு குழந்தைகளை மகிழ்விப்பதன் மூலம் விழுமியங்களை அவர்கள் உள்வாங்கச் செய்வது அவர்கள் ஆளுமையை வளர்க்க உதவுவது மிக விஷேசமாகும்.

**சின்மயாமிஷன்**
**நல்லூர்**

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உங்களுடைய பெற்றோர்கள் ஒரு விதமாக நடந்து கொள் கின்றனர். அது அவர்களுடைய முற்பிறவிகள், பிறந்த விதம்... மற்றும் பலவற்றின் மேல் ஆதாரப்பட்டுள்ளது. அதற்கு அவர் கள் பொறுப்பாளி அல்ல. அவர்களை எடைபோடுவதற்கு உங் களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அவர்கள் எவ்வாறு உள்ளனரோ அவ்வாறே ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்க ளிடம் அன்பாக இருத்தல் வேண்டும். அவர்களுக்கு சேவை செய்தல் வேண்டும் மற்றும் அவர்களை மதித்து நடத்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் உங்கள் உறவுமுறை சீராக இருக்கும். எடை போடாத காரணத்தினால் உறவு முறை சீராகும். உறவுமுறைகள் சீரானதால் இருதயம் மலரும். உங்கள் இருதயத்திற்கும் பூமியின் இருதயத்திற்கும் மிக நெருங்கிய ஒற்றுமை உள்ளது. இவை இரண்டும் ஒரே லயத்தில் செயற்பட்டால் நல்ல உடல் ஆரோக்கியம் இருக்கும். உங்களுக்கு காரியங்கள் கைகூடும். அருள்வெள்ளம் பாயும். இளைஞர்கள் இதைத்தான் சாதிக்க வேண்டும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



தைரியமாக இரு, நேர்மையுடன் இரு. எந்த நெறியானாலும் அதைப் பக்தி சிரத்தையுடன் பின்பற்று. அப்போது நீ இறைவனை அடைவது உறுதி.

எப்போதும் கொடுப்பவனின் நிலையில் இரு. பிரதியாக எதையும் எதிர்பார்க்காமல் அனைத்தையும் கொடு. அன்பைக்கொடு. உதவியைக் கொடு. சேவையைக் கொடு. சிறிது என்று கருதாமல் கொடுப்பதற்கென்று உன்னிடம் உள்ளவற்றை எல்லாம் கொடு. ஆனால் பண்டமாற்று நோக்குடன் கொடுக்காதே.

ஆன்மாவில் நிலைத்திரு. அப்போதுதான் உண்மையில் நேசிக்க முடியும்.

ஒவ்வோர் இன்பத்திற்குப் பின்னரும் துன்பம் வருகிறது. ஆன்மா பக்குவமடையுந்தோறும் ஒன்று மற்றொன்றைத் தொடர்கின்ற வேகமும் அதிகரிக்கிறது. நமக்கு வேண்டும் இன்பமும் அல்ல. துன்பமும் அல்ல. இரண்டும் நமது உண்மை இயல்பை மறக்கச் செய்கின்றன. இரண்டும் சங்கிலிகளே. ஒன்று இரும்புச் சங்கிலி, மற்றொன்று பொன் சங்கிலி. இரண்டின் பின்னணியிலும் இருப்பது ஆன்மா. அது இன்பம். துன்பம் இரண்டையும் அறியாதது.

துன்பம் இல்லாத இன்பமோ, தீமை இல்லாத நன்மையோ ஒருபோதும் இருக்க முடியாது.

எதையும் தேடிச்செல்லாதே, விலக்கவும் செய்யாதே. வருவதை அப்படியே ஏற்றுக்கொள். எதனாலும் பாதிக்கப்படாமல் இருப்பதே சுதந்திரம். பொறுத்துக் கொள்வது மட்டும் போதாது. பற்றற்று இருப்பது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேர்தல் வியூகம்



## மைத்திரி அரசாங்கமும் தமிழ் பேசும் மக்களுக்கு பயனுள்ள விடயங்களை செய்யப் போவதில்லை

### சித்தார்த்தன் அதிருப்தி

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். இவர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு எந்த விதமான பயனுள்ள விடயங்களையும் முன்னெடுக்கப் போவதில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பலம் பொருந்திய பெரிய அமைப்பாக இருக்கின்ற காரணத்தால் சர்வதேசமும் இலங்கை அரசும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எம்மை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

தென்னிலங்கையில் இருந்து வந்த சில சிங்கள கட்சிகள் தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பல வீனப்படுத்தும் நோக்கோடு வடக்கு, கிழக்கில் போட்டியிடுகின்றன. இதை எம்மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

அரசை சார்ந்தவர்களாக போட்டியிடும் இரண்டு கட்சிகள் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை தருவதாகவும் காணிகளை மீட்டுத் தருவதாகவும் வீடு கட்டித் தருவதாகவும் கூறி மக்களை குழப்புகின்றார்கள்.

இவர்கள் அரச தொழில் வாய்ப்பை பற்றி பேசுகிறார்கள். ஆனால் அரச தொழில் வாய்ப்புகளுக்கு ஒரு வரையறை உள்ளது. தேர்தல் பரப்புரைகளுக்காக மக்களை ஏமாற்றும் நிலையை உருவாக்குகின்றார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வதன் மூலம் அதில் நீண்டகால வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதை பற்றி நாம் பேசுகின்றோம்.

எந்தவொரு சிங்கள அரசும் எமக்கு தனியான செல்வாக்குகளையோ அபிவிருத்திகளையோ செய்யப் போவதில்லை. எனவே அரச கட்சிகளில் தமிழ் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டாலும் அவர்களுடைய தலைவர்களின் முடிவின்படிதான் செயற்பட முடியும்.

தமிழ் மக்களுடைய தீர்வு விடயத்தில் சிங்கள அரசு எந்த சாதகமான முடிவையும் எடுக்காது. புதிதாக அமைந்த அரசும் 6 மாத காலத்துக்குள் பெரிதாக எதையும் சாதித்து விட வில்லை.

வரவிருக்கும் அரசும் பலவீனமாகத்தான் இருக்கும். நாம் பலமாக இருந்தால் அழுத்தம் கொடுக்கக் கூடிய சக்தியாக நாம் செயற்படுவோம். அதன்மூலம் எமக்கு தேவையான விடயங்களை சிறிது சிறிதாக பெற்றுக்கொள்ள முடியும்.


இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படக்கூடாது என்று சர்வதேசம் நினைக்கின்றது. எனவே சர்வதேசத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் போது சர்வதேசமானது எமது பிரச்சினைகளில் அக்கறை செலுத்துவதற்கு அரசைத் தூண்டும்.

எனவே எமது கோரிக்கைகளாகவுள்ள நில விடுவிப்பு, சிறைக் கைதிகளின் விடுவிப்பு, காணாமற் போனோர் தொடர்பான சரியான பதில் என்பவற்றுக்கு சாதகமான தீர்வு வர வாய்ப்புள்ளது.

தமிழ் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து எமக்கென உள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பை பலம் பொருந்தியதாக மாற்ற வாக்களிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தூங்கிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் மட்டுமே விழிக்கின்றனர்

### சந்திரகுமார் சுட்டிக்காட்டு



மக்களுக்கு சேவையாற்றாது தூங்கிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் விழித்தெழுந்து மக்களிடம் வாக்கு கேட்டு வருகின்றனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். பாரதிபுரத்தில் இளைஞர், யுவதிகளை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இளைஞர்கள் மத்தியில் சரியான கருத்துருவாக்கம் ஏற்படும்போதே ஒரு சீரான சமூகத்தைக் கட்டி அமைக்க முடியும். இன்று சமூகத்தின் மீது அதிக கரிசனையுடன் செயற்படவேண்டிய பொறுப்பில இருப்பவர்கள் சமூகத்தின் மீது அக்கறையற்று செயலாற்றுகின்ற நிலைமையினைக காணமுடிகின்றது. இவற்றை நெறிப்படுத்துவதற்கு சரியான அரசியல் தலைமைத்துவத்தினால் மட்டுமே முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ் அரசியல் தலைமைகள் மக்களை சரியான பாதையில் வழிநடத்த தவறிவிட்டன. அதனால் மக்கள் பல துன்பங்களையும் துயரங்களையுமே எதிர்கொண்டனர். ஆகவே இனிவரும் காலங்களிலும் தவறான வழிநடத்தலை ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்படுவோமானால் தொடர்ந்தும் அழிவையே எதிர்கொள்ள நேரிடும். ஆகவே எமது சமூகத்தை சரியான பாதையில் வழிநடத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் இன்றைய இளம் சமூகத்திற்கு உண்டு. அந்த பொறுப்பிலிருந்து அவர்கள் விலகிவிட முடியாது.

இன்று இளைஞர்கள் மத்தியில் அரசியல்சார்ந்த விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். சமூகம் பல அரசியல் தலைமைகளால் ஏமாற்றப்படுகின்ற நிலையினை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். எமது மக்களின் எதிர்காலம் தொடர்பான எந்த தூரநோக்கு சிந்தனையும் பல அரசியல் தலைவர்களிடம் இல்லை என்ற உண்மையை அவர்கள் உணர்ந்துள்ளனர் என குறிப்பிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,

இன்று வடக்கு மாகாண சபை சீராக இயங்கியிருக்குமானால் பல இளம் தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதால் இளம் தலைமுறையினரின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உருவாக்கிய ஒரு பெரும் நிர்வாக கட்டமைப்பு இயங்காதிருப்பதென்பது வடக்கு மக்களின் எதிர்காலத்தில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. வினைத்திறனற்றவர்களிடம் அதிகாரங்கள் செல்வதாலேயே இப்பாரிய பாதிப்புக்களை மக்கள் எதிர்கொள்ள நேர்கின்றது.

அதுபோல் பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் ஒரு இனத்தின் தலைவிதியை தீர்மானிக்கின்ற ஒரு முக்கிய பலம். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மிக அதிகமான பாராளுமன்ற பிரதிநிதித்துவப் பலம் மக்களால் வழங்கப்பட்டது. ஆனாலும் அந்தப்பலம் மக்களுக்காக பயன்படுத்தப்படவில்லை. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மட்டுமே நித்திரையை விட்டெழுகின்றவர்களாகவே அவர்கள் உள்ளனர். இன்று தேர்தலுக்காக விழித்திருக்கும் அப்பிரதிநிதிகள் தேர்தல் முடிந்ததும் உறக்கத்திற்கு சென்று விடுவார்கள்.

ஆனால் இன்று மக்கள் பல தேவைகளுடனும் பிரச்சினைகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இவ்வாறு உறங்கிக் கொண்டிருப்பவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களானால் தீர்வுகளை எட்டுவதற்கான காலங்கள் இழுத்தடிக்கப்படுமே தவிர எவ்வித முன்னேற்றங்களை [illegible] போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஜனாதிபதியின் அறிவிப்பினால் ஐ.தே.கவின் வெற்றியானது பலமடங்கு அதிகரித்துவிட்டது

### விஜயகலா தெரிவிப்பு



பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றியானது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்புடன் அந்த வெற்றியானது பலமடங்காக அதிகரித்துவிட்டது. ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சி உருவாவது நிச்சயம். அதில் நாமும பங்காளிகளாக மாற வேண்டும் என்று அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முதன்மை வேட்பாளருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு ஐக்கிய தேசியக்கட்சியே முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இந்த நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில்தான் நடுநிலை வகிக்கவுள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வி அடைவார் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். தேர்தலில் நடுநிலை வகிப்பதன் மூலம் அவர் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றார்.

[illegible] தேசியக்கட்சியின் வெற்றியை பல மடங்காக உறுதி செய்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை கைப்பற்றியதும் நாமும் அதில் பங்காளியாக மாறுவோம். எமது பிரதிநிதித்துவத்தை நீங்கள், அதிகரிப்பதற்கான ஆணையைத்தந்தால் அதன் மூலம் மத்திய அரசாங்கத்தில் நாம் பெரும் செல்வாக்கை பெற முடியும். பிரதி அமைச்சராக பதவிவகித்த எனக்கு புதிய அரசாங்கத்தில் நல்லதொரு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே உறுதியளித்துள்ளார். எனவே அந்த அமைச்சின் மூலமாக குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் புதிய அரசாங்கம் அமைத்தவுடன் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார். வடமாகாணம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாகும். இங்கு பெரும் இழப்புக்களை சந்தித்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப திண்டாடி வருகின்றனர். வடபகுதி இளைஞர், யுவதிகள் வேலையற்று வாடுகின்றனர். எனவே புதிய அரசாங்கம் பதவியேற்றதும் இந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த பெண்கள் மற்றும் விசேட தேவையுடையவர்கள் தொடர்பில் தீவிர அக்கறை செலுத்தப்படும். பொதுமக்களின் காணிகளை மீள வழங்குவதுடன் மீள்குடியேற்றமும் பூரணத்துவப்படுத்தப்படும். இவையெல்லாம் இடம் பெறவேண்டுமானால் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நீங்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும். எமது பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதன் மூலமே இந்த செயற்பாடுகளை மேற கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவ்வாறு நாம் பயணித்தோம். புதிய அரசாங்கத்திலும் அவ்வாறு பயணிக்க நாங்கள் தயாராகவே உள்ளோம். தமிழ் மக்களின் உரிமைகள் பெறப்படுவதுடன் அவர்களது அன்றாடப்பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்பட வேண்டும், இதற்கேற்ற நடவடிக்கைகள புதிய ஆட்சியில் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார் கூறி...

ததாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, குற்ற ஒப்புதல்வாக்குமூலம சுதந்திரமாக சுயேட்சையாக தடுப்புக்காவல் கைதியினால் வழங்கப்பட்டதா என்ற உண்மை விளம்பல் விசாரணை நடைபெற்றது.

அப்போது சாட்சியமளித்த தடுப்புக் காவல் கைதி, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம், பொலிசார் சொல்லச் சொல்ல தனது கைப்பட எழுதி தன்னால் கையொப்பமிடப்பட்டது என தெரிவித்தார்.

அத்துடன் தன்னிடம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெற்றதாகக் கூறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை, தான் இதற்கு முன்னர் கண்டதில்லை என்றும், அவரிடம் தான் எந்த வொரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தையும் அளிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் தன்னை விசாரணை செய்த பொலிஸ் குழு தாங்கள் செய்வதை எழுதித் தந்தால், நீதிமன்றில் விரைவாக ஆஜர் செய்வோம் என கூறியபடியால் அவர்கள் சொல்லச் சொல்ல அதனை, நானே எனது கைப்பட எழுதிக் கொடுத்தேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்களை தான் செய்யவில்லை என தெரிவித்ததோடு, அவர்கள் என்னைத் தாக்கினார்கள் என்றும், அச்சுறுத்தல் காரணமாக அவர்கள் சொன்னதை அப்படியே எனதுகைப்பட எழுதிக் கொடுத்தேன் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பை வழங்கினார். அந்தத் தீர்ப்பில் அவர் தெரிவித்ததாவது:

பொலிஸ் மா அதிபரிலிருந்து, பொலிஸ் கான்ஸ்டபிள் வரையில் எந்தவொரு பொலிசாரினாலும் பதிவு செய்யப்படுகின்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் சட்டப்படி செல்லுபடியற்றவை என சான்று கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவு கூறுகின்றது.

ஆனால், அதற்கு விதிவிலக்காக, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளினால் பதிவு செய்யப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை, சட்டப்படி சான்றுப் பொருளாக ஏற்க முடியும் என பயங்கரவாத தடைச்சட்டத்தின் 16 -ம் பிரிவில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது.

இருந்தபோதிலும், ஒருவரை அச்சுறுத்தி, தூண்டுதலில் அல்லது வாக்குறுதியளித்து பெறப்படுகின்ற குற்ற ஒப்புதல்வாக்குமூலம் சட்டப்படி செல்லுபடியற்றது என சான்று கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு கூறுகின்றது.

இந்த வழக்கில், உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் எந்தவொரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கவில்லை என தடுப்புக்காவல் கைதி தெரிவிக்கின்றார். எதிரியினால் கையெழுத்தில் எழுதப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே மன்றில் முன்வைக்கப்பட்டது.

அதில் எதிரி தானே குற்றங்களைச் செய்ததாக ஒப்புக்கொண்டு அவரே தனது கைப்பட எழுதி ஒப்பமிட்டு தந்துள்ளார் எனக் கூறி, குற்ற ஒப்புதல் நீதிமன்றில் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை, கைதி மறுத்துரைத்துள்ளார். அத்துடன், பொலிசார் சொல்ல சொல்லத் தான், தான் அதை எழுதியதாக மன்றில் தெரிவித்தார். அவர் தானே குற்றத்தை ஒப்புக் கொண்டு சுயமாக எழுதிக் கொடுக்க வில்லை. எனவே சம்பந்தப்பட்ட தடுப்புக் காவல் கைதியிடமிருந்து, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயேச்சையாக, சுதந்திரமாக பெறப்பட்டது என்பதை அரச தரப்பு காண் பிக்கவில்லை. எனவே தடுப்புக்காவல் கைதியினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை இந்த வழக்கில் ஒரு சான்றாக ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்து நீதி பதி இளஞ்செழியன் அதனை நிராகரித்தார்.

இதனையடுத்து, இந்த எதிரிக்கு எதிராக வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு, ஏதாவது வேறு சான்றுகள் உள்ளனவா அல்லது தடுப்புக காவல் கைதியை விடுதலை செய்வதா என விரைவில் மன்றுக்கு அறிவிக்குமாறு அரச சட்டத்தரணிக்கு நீதிபதி அறிவுறுத்தினார். (செ-4)

## துப்பாக்கிச் சூடு...

படுத்துவதற்கு அரச செயற்பட்டு கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறானதொரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நடைக்கவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் பதிவாகியுள்ள முதலாவது மிகப்பெரிய வன்முறைச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11,12)

## தேர்தல் முறைப்...

எது மேலும் 156 புகார்களானது, பதாதைகள், சுவரொட்டிகள், விளம்பரங்கள் போன்றவற்றை சட்டவிரோதமாக காட்சிப்படுத்தப்பட்டமை தொடர்பாக பெறப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 245 பேர் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

## சிங்களவரும் சிந்திக்க...

என்று எனது சிங்கள நண்பர்கள் மூக்கின் மேல் விரலை வைத்தார்கள். சட்ட ரீதியாக இனப்படுகொலையை இவர்களால் நிரூபிக்க முடியாதே? அதுவும் 67 வருடகாலத்தை முன் வைத்து இப்பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. யாரைக் குற்றஞ்சாட்டுகிறார இவர்? எந்த அரசாங்கத்தைக் குறிப்பிடுகின்றார்? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பினார்கள். அதற்கு நான் கூறிய பதில் - முதலில் உங்களைச் சிந்திக்க வைக்கவே இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தேன். நடந்தவற்றை நீங்கள் உணர்ந்து கொண்டால்தான் எமக்குள் நல்லிணக்கம் ஏற்படலாம். உண்மையைத் தெரிந்து கொண்டால்தான் நாங்கள் செய்த பிழைகளைக் கைவிட்டு நல்லிணக்கம் நோக்கி நடக்கலாம் என்றேன். அத்துடன் சட்டப்படி இனப்படுகொலையைப் பார்ப்பது ஒரு கோணம். யார் இனப்படுகொலையில் ஈடுபட்டார்கள், அது இனப்படுகொலையா? ஆதாரங்கள் உண்டா, என்றெல்லாம் கேட்பது சட்டரீதியான கேள்விகள். நான் குறிப்பிடுவது சமூக ரீதியான விடயங்களை எமக்கு நடநததை. இலங்கை பூராகவும் என் இளமைக் காலத்தில் பரந்து வாழ்ந்த தமிழ் மக்களை எவ்வாறு நீங்கள் அடித்துத் துரத்தித் தெற்கை உங்கள் சமூகத்தினர்களுக்கு மாத்திரம் என்று ஆக்கிவிட்டீர்களோ அதைப் பற்றித் தான் நான் குறிப்பிடுகின்றேன்" என்று கூறினேன். எமது பிரேரணையை வெளிநாட்டுப் பிற இன மக்கள் வாசித்து அறிந்து இலங்கை நாட்டில் நடந்துள்ளதை அறிந்து வைத்திருக்கின்றார்கள். அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வெள்ளைக்காரர்கள் எமது நிலை பற்றி அறிந்து வைத்திருக்கும் அளவைக் கண்டு நான் பிரமித்து விட்டேன் அதேபோன்று சிங்களவர்களும் எமது பிரச்சினைகளை உணர வேண்டும் என்றார். (செ-12)

## 3 பிள்ளைகளின்...

போது பொது மக்கள் ஓடிச் சென்று பார்த்த வேளை பிரசாந்த் என்ற நபர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்.

உடனடியாக பொது மக்கள் உதவியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மேற்படி நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், தலைமறைவாகியுள்ள சந்தேகநபரினை தேடி வருகின்றனர். மேலும் கொலையினை திட்டமிட்டே கொலையாளி செய்திருக்க வேண்டும் எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்(செ-5, 60)

## தேர்தல் சுவரொட்...

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து அவ்விடத்திற்கு சென்ற பொலிஸார் மேற்படி 4 நபர்களை கைது செய்ததுடன் தேர்தல் சுவரொட்டிகளையும் எடுத்துச் சென்றனர்(செ-5,29)

## ஐ.நா அறிக்கை...

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டம் நேற்று இரவு நல்லூர் கிட்டுப் பூங்காவில் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்தப் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது இனவாதம் மற்றும் குடும்ப ஆதிக்கம் செலுத்திய ராஜபக்ஷக்களை ஒழித்துள்ளோம்.

கடந்த 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே இருந்த கசப்புணர்வை இல்லாமல் செய்துள்ளோம்.

நூறு நாட்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

பாராளுமன்றத்தில் அதிகாரம் மிக்க ஒரு ஆட்சியை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பலப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைப் பேரவையின் இலங்கை தொடர்பான அறிக்கை கிடைத்த பின்னர் குறுகிய காலத்தில் பல்வேறு சிபார்சுகளை உள்ளடக்கிய உள்ளகப் பொறிமுறையை முன்வைக்கவுள்ளோம்.

வடக்கில் காணாமல் போனவர்கள் அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் நாங்கள் ஒரு செயலணியை உருவாக்கவுள்ளோம்.

பாதுகாப்பு வலயங்களில் உள்ள காணிகளில் 1000 ஏக்கர் காணிகளை விடுவித்துள்ளோம். அதேபோன்று பொதுமக்களின் காணிகளை அடையாளப்படுத்தி கொடுங்கள். அவற்றை திருப்பிக் கொடுக்க வேண்டுமென இராணுவத்திடம் வலியுறுத்தியுள்ளோம்.

தேசிய பாதுகாப்புக் கருதி ஒரு சில பகுதிகள மட்டுமே இராணுவத்திடம் இருக்கும் ஏனைய பகுதிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்படும்.

வலிகாமத்தில் உள்ள ஏனைய இடங்களிலும் மக்களை மீள்குடியமர்த்துவதோடு மீனவர்களுக்கு ஒரு துறைமுகத்தையும் அமைத்துக் கொடுக்கவுள்ளோம்.

இவ்வாறு மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வடக்கு கிழக்கு மக்களுக்காக செயற்படவுள்ளோம் என ரணில் தெரிவித்தார்(செ-4)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# துப்பாக்கிச் சூடு...

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும் நிதியமைச்சருமான ரவி கருணா நாயக்கவின் ஆதரவாளர்கள் மீது நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு கொட்டாஞ்சேனை பெனடிக் மைதானத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த 13 பேர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜாசிங்க கூறுகின்றார்.

மேலும் இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நவீன ரக காரொன்றில் வருகைதந்த சிலர் நேற்று முற்பகல் 11.45 அளவில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த ஆதரவாளர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

இதன் பின்னர் அவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த தாக்குதலை தாம் வன்மையாக கண்டிப்பதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கறுப்பு நிற ஹைப்ரிட் ரக காரில் வந்தவர்களே தமது ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்

23 ஆம் பக்கம் பார்க்க










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.